SAPTHAGIRI (TAMIL)
ILLUSTRATED MONTHLY
Volume:2, Issue: 1, Pages:56
August -2022, Price Rs.5/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஆகஸ்ட் 2022,
விலை ரூ.5/-



கோகுலாஷ்டமி
19-08-2022

23-06-2022 அன்று திருப்பதி அருகே பாத்தகால்வா (பேரூரு பண்ட) அருகே புணரமைக்கப்பட்ட ஸ்ரீவகுள மாதா ஆலயம் ஆகம முறைபடி மஹாசம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது. ஸ்ரீவகுள மாதாவை தரிசித்த மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு. ஒய்.எஸ். ஜகன்மோகன் ரெட்டி அவர்களுடன் தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள், திருப்பதி இணைச் செயலாட்சித்தலைவர்கள் திரு. வி.வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள், திருமதி எஸ்.பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள், ஆந்திர மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்



















*யத்$_3$யப்யேதே ந பச்யந்தி*
*லோபே$_4$ாபஹறதசேதஸ: ।*
*குலக்ஷயக்ருதம் தே$_3$ாஷம்*
*மித்ரத்$_3$ரோஹே ச பாதகம் ॥*

**பேராசையால் மதியிழந்த இவர்கள் குலநாசத்தினால் ஏற்படும் குற்றத்தையும், நண்பர்களுக்குக் கெடுதல் செய்வதால் ஏற்படும் பாவத்தையும் பார்ப்பதில்லை**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–38*

*ஸ்ரீமத்யை விஷ்ணுசித்தார்யமநோநந்த$_3$நஹேதவே ।*
*நந்த$_3$நந்த$_3$நஸுந்த$_3$ர்யை கோ$_3$ாத$_3$ாயை நித்யமங்க$_3$ளம் ॥*

**விஷ்ணு சித்தர் என்னும் பெரியாழ்வாருடைய திருவுள்ளமுகக்கக் காரணமானவளும், (அவ்விஷ்ணுசித்தரோடுள்ள உறவாகிய) பெருஞ்செல்வத்தை உடையவளும், நந்த குமாரனுக்குப் பொருந்திய அழகுடையவளுமான கோதைக்கு என்றும் மங்களமாகுக.**

*– குருபரம்பரா ப்ரபாவம்*





# திருமலையப்ப ஸ்வாமி
## வருடாந்திர பிரம்மோத்ஸவம்
### 2022 செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 05 வரை

**27-09-2022**
செவ்வாய்க்கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**28-09-2022**
புதன் கிழமை
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ச வாகனம்

**29-09-2022**
வியாழக்கிழமை
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**30-09-2022**
வெள்ளிக்கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**01-10-2022**
சனிக்கிழமை
பகல் : மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**02-10-2022**
ஞாயிற்றுக்கிழமைம
பகல் : ஹனுமத் வாகனம்
இரவு : யானை வாகனம்

**03-10-2022**
திங்கட்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**04-10-2022**
செவ்வாய்க்கிழமை
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**05-10-2022**
புதன் கிழமை
பகல் : சக்கரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்




வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

மலர் 02 இதழ் 01

## ஆகஸ்ட் 2022



*சிறப்பு ஆசிரியர் :*
**திரு. A.V. தர்மா ரெட்டி,** ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர் (F.A.C), தி.தி.தே.
*வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :*
Dr. K. **ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
*புகைப்படங்கள் :*
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**



**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264360**



நீங்கள் ஸப்தகிரி இதழை
**www.tirumala.org**யில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri.helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


## உள்ளுறை

பக்கம்


**திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம் :**
**வராகன் நின்றருளும் தலம்** 7
*- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.*

**ஸ்ரீஹயக்ரீவ ஸ்தோத்ரமும் பலனும்** 10
*-திரு.ஆர்.கண்ணன், பெங்களூரு.*

**வரலக்ஷ்மி நோன்பும் மாண்பும்** 13
*- முனைவர் ஆ.செந்திலாண்டவன், சென்னை.*

**ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள் : த்யுதிமான்** 16
*- ஸ்ரீ. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை.*

**ஆதிசேஷனின் அவதாரங்கள்** 18
*- வித்வான் வி.சுப்பிரமணிய ஐயர், உடுமலை.*

**ஜோதிட சாஸ்திரம்: நவக்கிரகங்கள்-குரு** 21
*- முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, திருவல்லிக்கேணி.*

**திருவார்ப்பு ஸ்ரீகிருஷ்ணன் கோயில்** 23
*- நெய்வாசல் நெடுஞ்செழியன், சிதம்பரம்.*

**காயத்ரியில் மிளிரும் வேங்கடவன்** *-திரு. கே. ஸ்ரீநிவாசன், சேலம்.* 25

**நீதிக்கதைகள் : தெய்வ தரிசனம்** *- அம்பிகைபாகன், கோவை.* 31

**மூவரும் ஒன்றாகிய மூஷிக வாகனன்**
*- திருமதி கே.சுப்புலெட்சுமி, பரமக்குடி.* 32

**ஆண்டாள் போற்றும் கண்ணன்** *- முனைவர் ந.மைதிலி, சென்னை.* 34

**108 திவ்யதேச வைபவம் – திருவண்வண்டூர்** 38
*- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.*

**அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்**
**திருநாமமும் உரையும்**
*- ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.* 40

**அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை :** 44
**விதுரர்** *- திரு. எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்.*

**ராசிப்பலன்கள் : ஆகஸ்ட் 2022 -**
*- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம்.* 48

**ஆயுர்வேதம் : தேங்காய்** *- திருமதி வி.உக்ஷா, திருப்பதி.* 49

**சித்திரக்கதை : சதுர்த்தி விரதம்** 52


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : *நவநீத கிருஷ்ணர், திருமலை.*
பின்னட்டை : *ஸ்ரீவரலக்ஷ்மி தாயார் (சித்திரம்)*



# சிராவண மாதத்தின் சிறப்பே மங்கல விரதங்கள்!



அனைத்து செல்வத்திற்கும் மூலமாகத் திகழ்பவர் மகாலக்ஷ்மி தாயாரே ஆவார். அத்தாயாரின் அருட் பார்வையினாலேயே கல்வி முதலான அனைத்து செல்வங்களைப் பெறுகின்றோம். லக்ஷ்மி கடாக்ஷம் என்பது மனித இனத்திற்கேத் தேவையான ஒன்று. அத்தேவியின் தயை இருந்தால் மட்டுமே அனைத்திலும் முன்னேற்றமும், அளவற்ற செல்வமும் பெருகும். நம் சனாதன தர்மத்தின்படி வீட்டின் முன்பு தண்ணீர் தெளித்து, கோலமிட்டு, வாயிலில் மாவிலை தோரணம் கட்டி, வாசற்படிக்கு மஞ்சள், குங்குமம் இட்டு வீட்டை பொலிவாக்கும் போது, ஜல்ஜல்லென மெட்டி ஒலியோடு லக்ஷ்மி தேவி கால் பதிக்கின்றாள் என்பது நம்பிக்கை. தாயார் திருவடி பட்டாலே போதும் இல்லம் பொன்மயமாக மாறும்.

சிராவண மாதத்தில் இடம் பெறும் திதி, வாரம், நட்சத்திரம் பரம பவித்திரமானது. மங்கள கௌரி விரதம், ரிஷிபஞ்சமி, பானுஸப்தமி, ஸ்ரீவரலக்ஷ்மி விரதம், ஆடித்தபசு, ஆடிப்பெருக்கு, சிராவண விரதம், ஸ்ரீவராக ஜெயந்தி, ஸ்ரீஹயக்ரீவர் ஜெயந்தி, கோகுலாஷ்டமி, கல்கி ஜெயந்தி, ஸ்ரீவிநாயக சதுர்த்தி, கருட பஞ்சமி, நாக பஞ்சமி என பல பண்டிகைகளும், பருவ தினங்களும் இம்மாதத்தில் வருகின்றன.

மங்களகரமான தாய் மங்களகௌரிதேவி. திருமணமாகாத பெண்கள் கௌரிதேவியை பூஜித்தால் நல்ல கணவன் கிடைப்பான், திருமணமானவர்கள் இவ்விரதத்தை அநுஷ்டித்தால் சௌபாக்யம் உண்டாகும். வேண்டிய வரங்கள் நிறைவேறும் என்பது நம்பிக்கை. எனவே புதுதம்பதியர் சௌபாக்கிய சித்திக்காக இம்மாதத்தில் வரும் பிரதி செவ்வாய்க் கிழமை (மங்களவாரம்) மங்கள கௌரி விரதம் அநுஷ்டிப்பது நன்மை பயக்கும். மஞ்சள், குங்குமம், பூ, சுகந்த வாசனை திரவியம், பசு நெய்யில் கொழுந்து விட்டு எரியும் ஜோதி வடிவிலும் மங்கள கௌரி கொலுவீற்றிருப்பாள். ஆகவே இம்மாதத்தில் இல்லந்தேடி வரும் சுமங்கலி பெண்களுக்கு மங்களகரமான பொருட்களை வழங்கி, அவர்களின் அருளாசி பெறுவது சுபம்.

இந்துக்கள் கொண்டாடும் முக்கியமான பண்டிகைகளில் நாகபஞ்சமியும் ஒன்று. திருமணம் ஆகாத பெண்கள், கர்ப்பம் தரிப்பதில் தடங்கல் உள்ளோர், அங்காரக தோஷம் காரணமாக திருமணம் தாமதமாவோர் இப்பண்டிகையை கொண்டாடினால் சாந்தியளிக்கும். பஞ்சமியன்று சர்ப்பங்களை பூஜிப்போர்க்கு சர்ப்ப பயம் இருக்காது. சிராவண சுத்த ஏகாதசிக்கு புத்திரத ஏகாதசி என்று பெயர். முற்காலத்தில் அரசர்கள் புத்திர பாக்கியத்திற்காக இவ்விரதம் அநுஷ்டித்து பலன் பெறுவர். எனவே, இந்த ஏகாதசி நாளில் முறையாக விஷ்ணு பூஜை செய்தால் சந்தான பாக்கியம் உண்டாவது நிச்சயம் என புராணம் கூறுகிறது. இந்நாளில் விஷ்ணு பூஜை, உபவாசம், இரவு கண் விழித்து குடை தானம் செய்தால் புண்ணியம் வந்து சேரும். தாமோதர துவாதசியாக பெயர் பெற்ற சிராவண சுத்த துவாதசியன்று விஷ்ணு பூஜை, விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணம் செய்து, விஷ்ணு பிரதிமையை தானம் செய்தலும் நன்மை பயக்கும். ஸ்ரீமந்நாராயண மூர்த்தி வராஹ வடிவில் அவதரித்த சிராவண சுக்ல திரயோதசி அன்று வராஹ ஸ்வாமிக்கு பூஜைகளை, அர்ச்சனைகளை செய்வதினால் சிறப்பு பலன்கள் கிட்டும்.

தெய்வ சக்தியோடு கூடின சிராவண சுத்த பௌர்ணமி அன்று சிராவண பௌர்ணமியாகக் கொண்டாடுவர். சக்தி வடிவினளாகக் கூறப்படும் வீட்டுப் பெண் (சகோதரி) மூலம் அன்றைய தினம் ரக்ஷா பந்தனம் கட்டிக் கொள்ளும் சகோதரர்களுக்கு தேவதைகள் ரக்ஷையாக(பாதுகாப்பாக) இருந்து அரிஷ்டங்களைப் போக்குவர் என்பதும், அனைத்திலும் துணை நிற்பர் என்பதும் நம்பிக்கை. ஹயக்கிரீவ ஜயந்தி அன்று கல்விக்கு அதிபதியான ஹயக்கிரீவரை துதிப்பதினால் மாணவர்களுக்கு நினைவாற்றல் பெருகும்.

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா திருவவதரித்த திவ்ய திதி ஸ்ரீகிருஷ்ணாஷ்டமி. இதுவே கோகுலாஷ்டமி எனவும் கொண்டாடப்படுகிறது. இந்நந்நாளில் கண்ணனை வழிபடுபவர்களுடைய சகலபாபங்களும் தீயினிலிட்ட தூசாகும். எனவே, இச்சிராவண மாத விரதங்களை நாமும் கடைபிடித்து நன்மைகள் பல பெற்றிடுவோம்.

# வராகன் நின்றருளும் தலம்

*குன்றில் நின்று வானிருந்து நீள்கடல் கிடந்து மண்*
*ஒன்று சென்ற தொன்றையுண்ட தொன்றிடந்து*
*பன்றியாய் நன்றுசென்ற நாளவற்றுள் நல்லுயிர் படைத் தவர்க்கு*
*அன்று தேவ மைத்தளித்த ஆதிதேவ னல்லயே?*

திருமழிசை ஆழ்வாரின் அற்புதமான திருச்சந்த விருத்தம் இந்தப் பாசுரம். இதில் திருமலையின் மீது நின்று அருளும் எம்பெருமானின் பஞ்ச நிலைகளை, பைந்தமிழில் அருளிச் செய்திருக்கிறார் ஆழ்வார்.

இறைவனுடைய ஐந்து நிலைகள் என்னென்ன? பரமபதம், விண்ணாடு, வைகுந்தம் என்று பல பெயர்களில் வழங்கப்படும் நித்ய விபூதி.இது எங்கே இருக்கிறது? அங்கே உள்ள அம்சங்கள் என் னென்ன? என்பதைப்பற்றி எல்லாம் ஸ்ரீவைகுண்ட கத்யத்தில் சுவாமி இராமாநுஜர் மிக அழகாக விவரிக்கிறார்.

*ஸ்வா பாவிக அநவதிக அதிசய குணவத்தயாது*
*தேவ திர்யக் மனுஷ்யாதி*
*அகில ஜன ஹ்ருத யாநந்த நஸய*
*ஆஸ்ரித வாத்சல்யைக ஜலதே*
*பக்த ஜன சம்ச்லேஷைக போகச்ய*
*நித்ய ஜ்ஞான க்ரிய*
*ஐஸ்வர் யாதி போக சாமக்ரீ சம்ருத் தஸ்ய மஹா விபூதே*



என்ற வைகுண்ட கத்ய வரிகளில் அங்குள்ள ஆச்சர்யங்கள் விரியும்.

சாந்தோக்கிய உபநிஷதம், கருட புராணம், விஷ்ணு புராணம் முதலிய நூல்களிலும் இந்த வைகுந்த வளநகர் பற்றிய வர்ணனைகள் கொட்டிக் கிடக்கின்றன.

*“இந்த உடல் விட்டு இரவி மண்டலத் தூடே கி*
*இவ் வண்டங் கழிந்து இடை யில் ஆவரண மேழ்போய்*
*அந்தமில் பாழ் கடந்து அழகார் விரசை தனில் குளித்து”.*

என்று வைகுண்டம் பல ஆவரணங்களைக் கடந்து, அப்புறம் உள்ளது என்று ஆர்த்தி பிரபந்தத் தில் விளக்கப்பட்டிருக்கிறது.

“திருமகளும் மண்களும் இருபாலும் திகழ, நலம் அந்தம் இல்லது ஓர் நாடு” அது, என்று மற்ற ஆழ்வார் களும் பாசுரம் அருளியிருக்கிறார்கள்.

இது பாட்டு கேட்கும் இடம். இது முதல் நிலை. அதற்கடுத்து திருப்பாற்கடல். இங்கே எம்பெருமான் பள்ளி கொண்ட நிலையில் வியூகத்தில் இருக்கின் றான். இதற்கு “கூப்பாடு கேட்கும் இடம்” என்று சொல்லுவார்கள்.

தேவர்கள் குறையைக் கேட்பதற்காகவும், அவர்களைக் காப்பாற்றுகின்ற சிந்தனையோடும், “உறங்குவான் போல் யோகம் செய்யும்” பெருமாளாக இருக்கின்றான்.

அறிதுயில் நிலை என்று அவர்கள் இந் நிலையைச் சொல்லுகின்றார்கள். அடுத்து விபவ நிலை.

– பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி,
புவனகிரி.

*பரித்ராணாய சாதூனாம் விநாசாய*
*சதுஷ்க்ருதாம்*
*தர்ம சம்ஸ்தாபனார்த்தாய சம்பவாமி யுகே*
*யுகே*

“எப்பொழுதெல்லாம் தர்மம் அழிந்து, அதர்மம் தலை எடுக்கிறதோ, அப்பொழுது எல்லாம் தர்மத்தை நிலைநாட்டவும், சாதுக் களை காப்பாற்றவும் நான் அவதரிப்பேன்” என் பது கீதாசாரம். ஒவ்வொரு யுகத்திலும் அந்த அவதாரம் நடக்கிறது. இதற்கு விபவம் என்று பெயர்.

*‘‘காட்டாற்று வெள்ளம் போல் விபவம்’’* என்பார்கள்.

*“மீனமாகியு ங்கமடமதாகியு மேருவை*
*யெடுக்குந்தா*
*ளேனமாகியு நரவரியாகியு மெண்ணருங்*
*குறளாயுங்*
*கூனல் வாய் மழுத்தரித்த கோவாகியு*
*மரக்கரைக் கொலை செய்த*
*வானநாயகனாகியு நின்றமான் மலரடி*
*மறவேனே’’.*

என்று வில்லிபாரதம் மகாவிஷ்ணுவின் தசாவதாரத்தை கிரமமாகச் சொல்லும். அப்படி அவதாரம் எடுத்த புராண வரலாறுகள் நிகழ்ந்த இடங்களிலே பகவான் திருக்கோயில் கொண்டு அருளு கின்றார். இதற்கு அர்ச்சை நிலை என்று சொல்வார்கள். இதற்குப் பிறகு யோகிகள் மற்றும் ரிஷிகள் மனதிலே பேரான்மாவாக பெரும் கோயில் கொண்டுள்ளான்.

*“வந்தாய், மனம் புகுந்தாய், மன்னி நின்றாய்”* என்று சொல்லும்படியாக நிற்கிறான். இதற்கு அந்தர்யாமி நிலை என்று பெயர். இதனை நம்மாழ்வார்.


*“விண்மீது இருப்பாய் மலைமேல் நிற்பாய்*
*கடல் சேர்ப்பாய்*
*மண்மீது ழல்வாய் இவற்றுள் எங்கும் மறைந்*
*துறைவாய்*
*எண் மீதியன்ற புற வண்டத்தாய் எனதாவி*
*உண் மீது ஆடி உரு காட்டாதே ஒளி ப்பாயோ”*

என்று பாடுகிறார். இப்படிச் சொல்லப்பட்ட ஐந்து நிலைகளுக்கும் உரிய ஆதி தேவன், நாம் காணும்படி யாக திருமலை குன்றின்மீது நின்றிருக்கிறான் என்பதை இப்பாசுரத்தில் அருளுகிறார் திருமழிசை ஆழ்வார். எம்பெருமான் வானத்தில் இருந்தான் என்று பரத்தையும், நீள் கடல் கிடந்தான் என்று பாற்கடல் யோகத்தையும், அங்கிருந்து இந்த உலகத்தை எல்லாம் ஒரு காலத்தில் அளந்து தனதாக்கிக் கொண்டான் என்று வாமன திரிவிக்ரம அவதாரத்தையும், இந்த உலகத்தை இரண்யாட்சனிடம் இருந்து மீட்பதற்காக பன்றி உருவெடுத்து (வராக உருவம் எடுத்து) உலகத்தை மீட்டெடுத்தான் என்றும் சொல்லி, அதோடு விட்டானா என்றால் இல்லை என்று மேலே பாடுகிறார்.

பிரளய காலத்தில் உன் வயிற்றில் வைத்து எல்லாவற்றையும் காப்பாற்றினாய். மீட்டெடுத்த உலகத் திலே, உயிர்களைப் படைத்து, அந்த உயிர்களுடைய தன்மைக்கு ஏற்றவாறு, அவரவர்கள் சென்று வணங்கி, தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் படியான, பல்வேறு தேவதைகளையும் படைத்தான் அந்த தேவாதி தேவன்.

அந்த ஆதி தேவன், இதோ நாம் எல்லோரும் காணும்படியாக திருமலையின் மீது நின்று அருளு கின்றான். இப்பாசுரத்தில் ஐந்து நிலைகளிலும்





இருப்பவன் எம்பெருமானாகிய ஏழுமலையப்பன் என்பதைச் சொல்லுகிறார். ஆதி தேவன் என்கின்ற சப்தத்தினால் இவன்தான் அந்த பரப்பிரம்மம் என்பதையும் நமக்குக் காட்டிக் கொடுக்கிறார்.

திருமலையின் பூர்வீக வரலாற்றையும் நுட்பமாகச் சொல்கிறார். ஆதிகாலத்தில், பெருமாள் சீனிவாசனாக வருவதற்கு முன்னால், இந்தத் திருத் தலம் வராக க்ஷேத்திரமாக இருந்தது என்கின்ற புராணச் செய்தியையும் இதிலே நுட்பமாகக் கொடுக்கிறார். அந்த கடைசி வரியிலுள்ள "ஆதி" என்கின்ற சொல்லையும், மூன்றாவது வரியில் உள்ள வராக (பன்றி) சொல்லையும் இணைத்துப் பார்த்தால் இந்த திருமலையப்பன்தான் வராகப் பெருமான் என்கின்ற பேருண்மை விளங்கும். இத்தனை நுட்பங்களையும் இந்தப் பாசுரத்தில் அருளிச் செய்திருக்கிறார்.

வராக பெருமாள் சரம சுலோகத்தை இந்த இடத்தில் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

*"ஸ்திதே மனஸூ ஸூஸ் வதே சரீரே சதி யோ நர
தாது சாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா விஸ்வ ரூபஞ்ச
மா மஜம்
ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்ட பாஷாண சந்நிபம்
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்"*

ஸ்திதே மனஸி – மனம் கலக்கம் இன்றி இருக்கையில், ஸூஸ் வதே சரீரே சதி – உடம்பு நோயற்று ஆரோக்கியமாக இருக்கையில், தாது சாம்யே ஸ்திதே சதி – வாதம் பித்தம் ச்லேஷ்மம் என்னும் மூன்று தாதுக்களும் சரியான அளவில் இருக்கையில்,யோ நர–எந்த மனிதன், விஸ்வ ரூபஞ்ச அஜம் – உலகை உடம்பாக உடையவனும், பிறப்பு முதலான விகாரங்கள் இல்லாதவனுமான, மாம் ஸ்மர்த்தா – என்னை நினைக்கிறானோ, தத் – பிற்காலத்தில், காஷ்ட பாஷாண சந்நிபம் – கட்டையோடும் கல்லோடும் ஒத்தவனாய், ம்ரியமாணம் – மரணம் அடையும் காலத்தில், தம் மத்பக்தம் – அந்த என் பக்தனை, அஹம் ஸ்மராமி – நான் நினைக்கிறேன், நயாமி பரமாம் கதிம் – உயர்ந்த கதிக்கு அழைத்துச் செல்கிறேன். வைணவனுக்கு அந்திம ஸ்மிர்தி வர்ஜனம் என்று காஞ்சி பேரருளாளன் சொன்னதும் இதைத்தான்.

ஐம்புலன்களும் நன்றாக இருக்கும் பொழுது, உடம்பு பலமாக இருக்கின்ற பொழுது, ஒருதரம் அந்தப் பெருமானை நினைத்தால், மரணத்தருவாயில் அவனை நினைக்க வேண்டி இருக்காது. காரணம் அப்பொழுது, ஐம்புலன்களின் கட்டுப்பாட்டிலிருந்து விலகி இருப்பான்.காலன் வரும் நேரம் அது, கண்கள் பஞ்சடைந்து இருக்கும் காலம் இது, வாய் பேச முடியாத நேரமது (காஷ்ட பாஷாண சந்நிபம்) மனம் கலங்கி அச்சத்திலிருக்கும் காலம் அது.

ஆனால், அக்காலத்தில் வராகப் பெருமான் இந்த ஆன்மாவை காப்பாற்றுவதற்காக "மத்பக்தம்" என்று சொல்லி தன்னுடைய மேலாடையால், அந்த ஆன்மாவை அணைத்து மூடி, கலங்காப் பெரு நகரான வைகுந்த வானுலகுக்கு அழைத்துச் செல்வான். அந்தப் பெருமான் தான் திருமலை அப்பனாக நமக்குக் காட்சி தருகிறான்.

அந்த ஆதி தேவனைப் போற்றுவோம். மீதி வாழ்நாட்களை அவன் பார்த்துக் கொள்வான்.

பாசுரம் படிப்போம்...





# ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரமும் பலனும்

**– திரு. ஆர். கண்ணன், பெங்களூரு.**

ஸ்தோத்ரம் என்றால் சிறந்தவர்களைப் பற்றி புகழ்ந்து கூறுவது, பாடுவது ஆகியவை. ஸ்தோத்ரத்திற்குரியவர் அதனைக் கேட்டு மகிழ்ந்து உரிய பலனை அளிப்பது வழக்கம்.

உலகினில் சிலரை இல்லாத குணங்களைக் கூறி, பலன் பெற்று செல்வதைக் காணலாம். அவ்வித பலன்கள் நித்யமானது இல்லை. கூடிய விரைவிலேயே குறைந்து விடுவதைப் பார்க்கிறோம். ஆனால், எம்பெருமானைப் பற்றி ஸ்தோத்ரம் செய்தால் நிரந்தரமான பலனை அடையலாம். உதாரணமாக, குழந்தை துருவன் எம்பெருமானிடம் பக்தி செலுத்தி ஸ்தோத்ரம் செய்து, உயர்ந்த பதவியைப் பெற்றான் என்பதை சரித்திரங்களில் இருந்து அறிகிறோம். பிரகலாதன் எம்பெருமானை ஸ்தோத்ரம் செய்து பலவித இன்னல்களிலிருந்தும் மீண்டான் என்பது நிதர்சனம்.

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் ஸ்தோத்ரம் பற்றி ஐந்து நாமாக்களைத் தன்னுள் கொண்டுள்ளது.

1. ஸ்த்வ்ய: (684), எம்பெருமான் ஸ்ரீவிஷ்ணு ஸ்தோத்ரம் செய்ய முற்றிலும் உகந்தவன்.
2. ஸ்தவ்ய: (685), தன்னை அடியவர்கள் ஸ்தோத்ரம் செய்வதை அன்புடன் ஏற்றுக் கொள்பவன்.
3. ஸ்தோத்ரம் (686), எம்பெருமான் அருளாலேயே அடியவர்கள் துதிபாடுவதால் அவனே ஸ்தோத்ரம் எனப்படுகிறான்.
4. ஸ்துத: (687), நித்யசூரிகள், முக்தர்கள், தேவர்கள் மற்றும் மநுஷ்யர்கள் அவரவர் தகுதிக்கும், ஞானத்திற்கும், சக்திக்கும் ஏற்றபடி துதிசெய்யப்படுபவன்.
5. ஸ்தோதா:(688), தம்மை ஸ்தோத்ரம் செய்பவர்களின் துதிபாடுபவன்.

எம்பெருமான் ஒருவனே எல்லா நற்குணங்களின் இருப்பிடமாகையாலே ஸ்தோத்ரத்திற்குத் தகுந்தவன். அவன் அடியவர்களின் ஸ்தோத்ரத்தை தன் குழந்தையின் மழலைச் சொல்போல் ஏற்றுக்கொண்டு மகிழ்கிறான். மகிழும் எம்பெருமான், அடியவர்களின் ரக்ஷகனாகையாலே, அடியவர்கள் ஸ்தோத்ரத்தில் செய்த பிரார்த்தனையை அன்புடன் அருளுகிறான்.

அவனை, ஸ்தோத்ரம் செய்து வேண்டுபவர்களுக்கு, வரம் தரும் பெருமாள் என்று ஆசார்யர்கள் அருளிச் செய்துள்ளனர். அவன், ஸ்தோத்ரம் செய்பவர்களின், பெரியவர்கள், சிறியவர்கள், பண்டிதர்கள், பாமரர்கள் போன்ற தாரதம்யத்தைப் பார்ப்பதில்லை. ஸ்தோத்ரம் செய்பவர்களின் உள்ளத்தை அறிந்து அருள் புரிகிறான். ஆகவே, எம்பெருமானை ஸ்தோத்ரம் செய்வது சாலவும் நன்று.

ஸ்ரீநம்மாழ்வாரும் எம்பெருமானை ஸ்தோத்ரம் செய்தால் எல்லா நன்மைகளையும் பெறலாம் என்று திருவாய்மொழியில் அருளிச்செய்துள்ளார்.

*''கொள்ளக்குறைவிலன், வேண்டிற்றெல்லாம் தரும்கோதில், என் வள்ளல்மணி வண்ணன் தன்னைக் கவிசொல்லவம்மினோ''* (3–9–5).

**எம்பெருமான் வள்ளல்;**

நாம் உள்ளத்தோடு பிரார்த்தனை செய்தால் நாம் வேண்டியவற்றை அருள்வான் என்று ஆழ்வார் அருள்கிறார்.

ஸ்வாமிதேசிகன் திருவஹீந்திரபுரம் திவ்ய தேசத்திற்குச் சென்றபோது, தன்னுடைய தாய் மாமனான ஸ்ரீ அப்புள்ளார் உபதேசித்த கருட மந்திரத்தை அங்குள்ள ஔஷதகிரியில் அமர்ந்து ஜபித்தபோது, கருடபகவான் தோன்றி, ஹயக்ரீவ மந்திரத்தை உபதேசித்தார். அந்த மந்திரத்தை ஸ்வாமி ஜபிக்க ஸ்ரீஹயக்ரீவர் நேரில் தோன்றினார் என்று பெரியோர் கூறுவர். அந்த ஸ்ரீஹயக்ரீவர் மீது ஸ்வாமி 33 சுலோகங்கள் அடங்கிய அற்புதமான ஸ்தோத்ரத்தை இயற்றினார். அதுவே ஸ்ரீஹயக்ரீவ ஸ்தோத்ரம் என்று புகழ்பெற்று விளங்குகிறது.



முதலில் ஸ்ரீஹயக்ரீவரைப் பற்றிச் சிறிது அறிவோம். ஒரு சமயத்தில் மது, கைடபர்கள் என்ற இரு அசுரர்கள் பிரம்மாவிடமிருந்து வேதங்களைக் கவர்ந்து சென்றனர். பிரம்மாவின் வேண்டுதலின் பேரில் எம்பெருமான் குதிரை முக வடிவு கொண்டு அந்த அசுரர்களை அழித்து, வேதங்களைமீட்டு, பிரம்மாவிடம் கொடுத்தார். அதனாலேயே எம்பெருமான் வேதங்களுக்கும் மற்ற கலைகளுக்கும் ஸ்வாமி என்று போற்றப் பெறுகிறார்.

ஸ்வாமிதேசிகன் இந்த ஸ்தோத்ரத்தை ஆரம்பிக்கும்போதே "ஸ்ரீஹயக்ரீவர் ஞானம், ஆநந்தம் வடிவமாய், எல்லா கலைகளுக்கும் உறைவிடமாய் விளங்குகிறார்'' என்று அருளிச் செய்த மற்றையச் சுலோகங்களுக்கெல்லாம் முதற்படி.

ஆகவே, மாணவர்கள் கல்வியில் நன்கு தேர்ச்சி பெற, முதலில் ஸ்ரீஹயக்ரீவரை ஸ்தோத்ரம் செய்தால் நன்று என்பது தேறுகிறது. அடுத்தபடியாக, ஸ்ரீஹயக்ரீவர் நமது அஜ்ஞானமாகிற இருளை அடியோடு போக்குகிறார் என்று அருளிச்செய்கிறார். மாணவர்கள் இந்த ஸ்தோத்ரம் மூலம் தாங்கள் அறியாதவற்றை அறிந்து கொள்வதற்கு, கடினமானவற்றை எம்பெருமான் அருளாலேயே அறிந்து கல்வியில் நன்கு தெளிவு பெறலாம் என்று உறுதியாகிறது.

மேலே ஸ்வாமி ஸ்ரீஹயக்ரீவரை கல்விக்கடவுள் என்றே குறிப்பிடுகிறார். வாகீசன் (வாக்குக்கு ஈசன்) என்று கூறுவதால் இந்த ஸ்தோத்ரத்தின் மூலம் மாணவர்கள் நல்வாக்குவன்மை பெறலாம் என்றபடி.

ஸ்வாமிதேசிகன் அதற்குமேலே "வித்யைக்கு அதிபதி தக்ஷிணாமூர்த்தி, சரஸ்வதி மற்றும் வியாசர் முதலான மஹரிஷிகள் ஸ்ரீஹயக்ரீவர் அருளாலே வித்யைகளில் சிறந்து விளங்குகிறார்கள்'' என்று அருளிச்செய்கிறார். அதுபோல ஸ்ரீஹயக்ரீவரை ஸ்தோத்ரம் செய்தால் நாமும் அவர் அநுக்ரஹத்தாலே வித்யைகளில் சிறந்து விளங்கலாம் என்று தேறுகிறது.

மேலும், ஸ்ரீஹயக்ரீவர் ஞானிகளின் உள்ளத்தில் உறைகின்றார் என்று குறிப்பிடுகிறார். அவ்வாறு, எம்பெருமான் தன் உள்ளத்தில் உறைபவனாக எவன் காண்கின்றானோ அவனுக்கு நல்லவாக்குகள் தாமே வந்து அடைகின்றன. ஒரு வாதத்தில் ஈடுபடும்போது, ஸ்ரீஹயக்ரீவரை தியானம் செய்தால், வேண்டிய

## செப்டம்பர் மாத பண்டிகைகள், பருவ தினங்கள் மற்றும் தி.தி.தே. ஆலய உற்சவங்கள்

| | |
|---|---|
| 01 | ரிக்ஷி பஞ்சமி. |
| 05-08 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பவித்ரோத்ஸவம். |
| 06 | விஷ்ணு பரிவர்தன ஏகாதசி. |
| 07 | வாமன ஜயந்தி. |
| 07-10 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பவித்ரோத்ஸவம். |
| 09 | அனந்தபத்மநாப ஸ்வாமி விரதம். |
| 10 | நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 20-23 | அப்பளாய குண்டா, பெங்களூரு, கீலபட்லா ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 26 | தேவி நவராத்திரி ஆரம்பம். |
| 26-அக்5 | திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவம், உபமாக ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம். |
| 27-அக்5 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயத்தில் நவராத்திரி உத்ஸவம். |

வார்த்தைகள் தானே வந்து தோன்றி வெற்றியை அளிக்கும். ஸ்ரீஹயக்ரீவர் அருளைப் பெற பாக்யம் செய்திருக்கவேண்டும். அது எளிதாகக் கிட்டாது. "அவன் திருவடிகளை வணங்கினால் மோக்ஷம் என்னும் பெரும் செல்வத்தை அடைய வழி உண்டாகும். இது மட்டுமல்ல, சிந்தாமணி போன்று விரும்பும் எல்லாப் பொருள்களையும் பெறலாம்." ஆகவே கல்வி மட்டுமல்ல நாம் விரும்பும் எல்லா பலன்களையும் பெறலாம். மாணவர்கள் கல்வி மேன்மைக்கு மட்டுமன்றி, அதற்குத் தேவையான பொருளாதாரத்தையும் அடையப் பெறலாம் என்று தேறுகிறது.

### ஸ்ரீஹயக்ரீவர் ஞானவடிவானவர்

"ஞானமே உருவெடுத்தவர். அவரின் திருஉருவத்தில் ஞான உபதேச முத்திரையைக் காணலாம். ஆகவே அவரைஅடிபணிந்தால் அவர் அநுக்ரஹத்தால் ஞான அபிவிருத்தி வளர்ச்சி அடைவது திண்ணம்" என்று ஸ்வாமி அருளிச்செய்கிறார்.

### ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவரை எப்படி தியானம் செய்யவேண்டும்.

எம்பெருமானுடைய ஒரு வலது திருக்கை ஜப மாலையுடன் ஞான உபதேச முத்திரையுடையது. இடது திருக்கை மஹாலக்ஷ்மியை அணைத்துக் கொண்டு புத்தகம் ஒன்றை கையில் தரித்திருப்பது. மற்றைய இரண்டு கரங்களில் சங்கு சக்ரம் விளங்குகின்றன.

எம்பெருமானே! தேவரீர் திவ்ய கடாக்ஷங்கள் எப்பொழுதும் கவிபாடும் திறமையை அடியேனுக்கு அருளவேண்டும். அடியேன் பாடும் கவிகள் கேட்பவர்களுக்கு அமுதப்பெருக்கைப் பொழிய வேண்டும். அந்தக் கவிகளை கூறுபவர்களுக்கு அவர்கள் விரும்பும் எல்லாப் பலன்களையும் அளிக்கவேண்டும்.

உன் அருளாலே, அடியேன் வாதப்போர்களில் வெற்றி பெற வேண்டும். அப்போது தேவரீர் அடியேனின் நாக்கின் நுனியில் இருந்து அநுக்ரஹிக்கவேண்டும் என்றபடி.

### கண்ணன் கருத்துரை



*வித்யாவினயஸம்பன்னே ப்ராஹ்மணே கவி ஹஸ்தினி ।*
*சுனி சைவ ச்வபாகே ச பண்டிதா: ஸமதர்சின:॥*

(5-18)

கற்றறிந்து அடங்கிய
பிராமணனிடத்தும், பசுவினிடத்தும்,
யானையிடத்தும், தாயிடத்தும்,
நாயைத் தின்னும் புலையனிடத்தும்
ஞானிகள் சமமான காட்சி
உடையவராக இருக்கின்றனர்.



தொகுப்பு:
பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன்,
திருப்பதி.

# வரலக்ஷ்மி நோன்பும் மாண்பும்

வரலக்ஷ்மி நோன்பு, ஆவணி மாத பௌர்ணமிக்கு முந்தைய வெள்ளிக்கிழமையில் கொண்டாடப்படுகின்றது. இவ்வரலட்சுமி நோன்பு குறித்து பவிஷ்யோத்தர புராணத்தில் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

### சிவனார் உபதேசம்

முன்னொரு காலத்தில் உமாதேவியார் சிவபெருமானிடம், "சுவாமி! மண்ணுலகத்தில், எல்லாவித போகங்களையும், சௌபாக்யங்களையும், மக்கட்பேற்றையும் வழங்கக் கூடிய நோன்பு எதுவென்று கேட்க, சிவபெருமான், உமாதேவி யார்க்கு, வரலட்சுமி நோன்பின் சிறப்புகளைக் கூறினார் என்பது வரலாறு.

### சுமங்கலி சாருமதி

முன்பு, பாரத நாட்டில், குண்டினம் என்ற இடத்திலே சாருமதி என்ற சுமங்கலிப் பெண் வாழ்ந்து வந்தாள். அவள் தூய்மையிலும், பூஜை புனஸ்காரங்களில் தவறாதவளாகவும் சிறப்புற்றிருந்தாள். ஒரு நாள் சாருமதியின் கனவில் வரலட்சுமி தேவி தோன்றி, வரலட்சுமி நோன்பினைக் குறித்து மந்திர உபதேசம் செய்து மறைந்தாள். உறக்கம் கலைந்ததும், தான் கண்ட கனவையும், அதில் வரலட்சுமி கூறிய எல்லாவற்றையும் தன் தோழிமார்களிடம் எடுத்துச் சொல்லி, மகாலட்சுமி நோன்பினைக் கொண்டாட வேண்டும் என்பதைக் கூறி நோன்பு இருக்க வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்யத் தொடங்கினாள்.

"குண்டினம்" என்னும் நகரத்தையே தூய்மை செய்து மங்களத் தோரணங்கள், மலர்க்கொத்துகள், மாவிலைத் தோரணங்கள் என்று நகரம் பேரழகாக அமைந்தது. ஒவ்வொருவரும் தத்தம் வீட்டையும் அலங்காரம் செய்தனர்.

### வரலட்சுமி நோன்பு விரதம் கொண்டாடும் முறைகள்

ஆவணி மாத பௌர்ணமி நாளுக்கு முந்தைய வெள்ளிக் கிழமையில் அனைவரும் சேர்ந்து வரலக்ஷ்மி நோன்பிருக்கத் தொடங்கினர். பூக்களால் அலங்காரம் செய்த பூஜை மண்டபம் நடுவிலே மேடை மீது நெல், பச்சரிசி முதலியவற்றை தலை வாழை இலை மேல் பரப்பி, தாமரைக் கோலமிட்டு கும்பத்தை (கலசத்தை) அதன் மீது வைத்து, கும்பத்தில் இப்பூஜைக்கு மட்டும் நீரை நிரப்பாமல், பச்சரிசியால் நிரப்ப வேண்டும்.

### ஒன்பது முடிச்சு

சிக்கலில்லாத வெள்ளை நூலில் ஒன்பது இழைகள் எடுத்து மஞ்சளில் தோய்த்து முறுக்கி வைத்துக் கொண்டு அந்நூலில் ஒன்பது முடிச்சுகள் போட்டு கும்பத்தில் வைத்துப் பூசையை ஆரம்பித்து விட வேண்டும்.

### காப்புக்கயிறு

சங்கல்ப பூசை, புண்யாகவாசனம் முதலிய பூர்வாங்க பூசைகளுடன், விசேஷ உபசார பூஜை, அங்க பூசை முதலிய வற்றைச் செய்து, ஒன்பது நாமங்களால், மஞ்சள் நூலிலுள்ள ஒன்பது முடிச்சுகளை யும் பூசித்து, அதனை பெண்கள் வலக்கை யில் அணிந்து கொள்ள வேண்டும். பொதுவாக நோன்புகளுக்கு காப்புக் கட்டும் போது, ஆண்கள் வலக்கையிலும்



- முனைவர் ஆ. செந்திலாண்டவன், சென்னை.



பெண்கள் இடக்கையிலும் கட்டுவது வழக்கம் என்று நமக்குத் தெரியும்.

ஆனால், பெண்களே செய்யக்கூடிய வரலட்சுமி நோன்பில் மட்டும் பெண்கள் இக்காப்புக் கயிற்றை வலக்கையில் கட்டிக் கொள்ள வேண்டும். காப்பு கட்டும் போது சொல்ல வேண்டிய துதியைக் காணலாம்.

*"சர்வமங்கல மாங்கல்யே சர்வாபப ப்ரணாசினீ*
*தோரகம் ப்ரசி க்ருஹ்ணாமி சுப்ரீதா பலசர்வதா*
*பத்னாமி தக்ஷிணே ஹஸ்தே நவசூத்ரம் சுபப்ரதம்*
*புத்ர பௌத்ராபி வ்ருத்திம்ச சௌபாக்யம் தேஹிமேரேமே!"*

### ஒன்பது முடிச்சுகளுக்கும் உள்ள மகா லட்சுமியின் பெயர்கள் :

*1) ஓம் கமலாய நம:, 2) ஓம் ரமாயை நம:, 3) ஓம் லோகமாத்யை நம:, 4) ஓம் விஸ்வஜனனீ நம:, 5) ஓம் மகாலட்சுமி நம:, 6) ஓம் ஷீராப்தி தநயா நம:,7) ஓம் விஸ்வஸாட்சிணி நம:, 8) ஓம் சந்த்ர சகோதர்யை நம:, 9) ஓம் ஹரி வல்லபாய நம:*



இம்மந்திரங்களைக் கூறி அருகம் புல் மற்றும் மற்ற உதிரிப் புஷ்பங்களாலும் அட்சதை கலந்து அர்ச்சனை செய்தல் வேண்டும். வரலட்சுமி நோன்பிற்கு விசேஷப் பிரசாதமாக நெய் சாதம் படைத்தல் மரபு. மற்ற நோன்புகள் போலக் கடுமையான விரதங்கள் வரலக்ஷ்மி நோன்பில் இல்லை. காலையிலும் இரவிலும் பழம், பால் சாப்பிட்டு, மதியம் ஒரு வேளை எளிய உணவு உண்ணலாம்.

### ஐதீகம்

ஒன்பது ஆண்டுகள் இவ்வரலக்ஷ்மி நோன்பினை விடாது செய்தார்களேயானால், அவர்களுக்கு மிகப் பெரிய அளவில் சகல செல்வ யோகமிக்கப் பெருவாழ்வு கிடைக்கும் என்பது தொன்மை மரபு.

### நோன்பின் பயன்

இந்நோன்பினை கடைபிடிப்பவர்களுக்குப் பதினாறு வகைச் செல்வங்களும், மகாலக்ஷ்மியின் அருளால் கிடைக் கப் பெறுவர். சுமங்கலிப் பெண்கள், தங்கள் கணவர்கள் நலத்தோடும், வளத்தோடும் உயர்ந்து வாழவும், தாலிப் பாக்யம் நிலைக்கவும், இல்லங்களில் செல்வச் செழிப்பு நிலவவும் இந்நோன்பு வழி வகைச் செய்கின்றது.

### தானதர்மம்

மகாலக்ஷ்மிக்குப் படைக்கப்பட்ட நெய்சாதமும், மற்றுமுள்ள இனிப்பு வகைகள், பழங்கள், தாம்பூலம், மஞ்சள், வளையல்கள், வஸ்திரம் ஆகியவற்றை சுமங்கலி களுக்குத் தானமாகக் கொடுத்து ஆசி பெறுதல் வேண்டும்.

### ஸ்ரீமஹாலக்ஷ்மியின் சிறப்புகள்

ஸ்ரீமஹாலக்ஷ்மி, மாதுளம்பழத்திலிருந்து உதித்ததால் மாதுளாங்கி என்றும், பத்மனால் வளர்க்கப்பட்டதால் பத்மாவதி என்றும், இரத்தின வடிவம் எடுத்ததால் இரத்னாவதி என்றும், ஜனக மகாராஜனுக்கு மகளாதலின் ஜானகி என்றும், பூமிக்குள்ளே கலப்பையின் நுனியில் வெளிப்பட்டதால் சீதை என்றும், பாற்கடலில் இருந்து தோன்றியதால் "ஸ்ரீ" என்றும் போற்றப்படுகிறாள்.

### மகாலக்ஷ்மி வாசம் செய்யும் இடங்கள்

பதினாறு வகை பேறு களையும் வழங்குபவள் மஹா லக்ஷ்மியே ஆவாள். வீரமுடையவர்கள், சோம்பல் தவிர்த்துச் சுறுசுறுப்பாக இருப்பவர்கள். தவம் உடைய

வர்கள், ஈகைக் குணம் நிறைந்தவர்கள் தாம் பெற்ற செல்வத்தைத் தானும் அனுபவித்துப் பிறர்க்கும் கொடுக்கும் இயல்புள்ளவர்கள் ஆகியவர்களை ஸ்ரீமஹாலக்ஷ்மி தேடிச் சென்று போற்றுவாள். மேலும், வில்வ மரம், நெல்லி மரம், துளசி, மஞ்சள் செடிகளிலும் ஸ்ரீமஹாலக்ஷ்மி நித்யவாசம் செய்கிறாள் என்பது சிறப்பு.

ஸ்ரீமஹாலக்ஷ்மியை வில்வத்தால் அர்ச்சனை செய்யலாம். வில்வ மரத்தை வலம் வந்தால் ஸ்ரீமஹாலக்ஷ்மியை வலம் வந்தது போலாகும்.

வாமன புராணத்தில், மகாலக்ஷ்மியின் திருக்கரங்களில்தான் வில்வமரம் தோன்றியது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், பூர்ணகும்பம், மஞ்சள், குங்குமம், திருமண் சூர்ணம், கோலம், சந்தனம், வாழை, மாவிலை தோரணம், வெற்றிலை, திருவிளக்கு, குத்து விளக்கு, யானை, பசு, கண்ணாடி, அவரவர் உள்ளங்கை, தீபம் ஆகிய மங்கலப் பொருட்களிலும் ஸ்ரீமஹாலக்ஷ்மி நித்ய வாசம் செய்கிறாள் என்பது அறிந்து போற்றுதல் வேண்டும்.

## மஹாலக்ஷ்மி பெருமையை விளக்கும் நூல்கள்

மஹாலக்ஷ்மியின் திருக்கரங்கள் தமிழில் தங்கக் கைகள் என்றும், வடமொழியில் சொர்ண ஹஸ்தம் என்றும் அழைக்கப் படுகின்றன. மஹாலக்ஷ்மியின் பெருமையை விளக்கும் நூல்களாவன : 1) ஸ்ரீசூக்தம், 2) ஸ்ரீ ஸ்துதி, 3) கனகதாரா ஸ்தோத்திரம், 4) மஹாலக்ஷ்மி அஷ்டகம், 5)லலிதா சஹஸ்ர நாமம் முதலியனவாம். வர லக்ஷ்மி விரதத்தின்போது மஹாலக்ஷ்மியின் பெருமைகளை விளக்கும் இப்படிப்பட்ட ஸ்தோத்திரங்களைப் படித்து, உணர்ந்து போற்றி வழி பட்டால் சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு பெறலாம்.

## அர்ச்சனைப் பூக்கள்

தாமரைப் பூவில் வாசம் செய்யும் மகா லக்ஷ்மியை, தாமரைப்பூ, செவ்வந்தி என்னும் சாமந்திப்பூ, தாழம்பூ, துளசி, அருகம்புல் ஆகியவற்றில் அலங்காரம் செய்து அர்ச்சனையும் செய்யலாம்.கலசத்தில் ஆவாஹணம் செய்து, வரலட்சுமி நோன்பிற்காகவே பூஜைப் பொருட்கள் விற்கும் கடைகளில் வரலட்சுமி முகம், கை, கால்கள் கிடைக்கின்றன. கலசத்தில் அம்பாள் மகாலக்ஷ்மி இருப்பது போல பட்டு வஸ்திரங்களால் அலங்காரம் செய்தும் பூஜைகள் செய்ய வேண்டும்.

## சுமங்கலி தானம்

வரலட்சுமி நோன்பு, பூஜைக்கு வரும் சுமங்கலிப் பெண்களுக்கும், திருமணம் ஆகாத கன்னிப் பெண்களுக்கும், வெற்றிலை, பாக்கு, கண்ணாடி வளையல், ரவிக்கைத் துணி, குங்குமம், மஞ்சள், பூ முதலியன கொடுத்து, அம்பாள் ஆசிகளைப் பெற வேண்டும்.

## முடிப்புரை

மாங்கல்ய தோஷம் நீக்கி, தீர்க்க சுமங்கலி வரம் தரும் வரலட்சுமி நோன்பு, விரதம், பூஜை என்பன நமது பாரத சனாதன இந்து தர்மத்தில் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்ற சுமங்கலிகள், கன்னிகைகள் அனைவரும் கொண்டாடி மகிழ வேண்டிய அற்புத விரதம்.



ஒளியுடையவன், இராமனின் திருமேனி ஒளியுடையது என்பது பொதுவான பொருள். குணங்களையே தனக்கு ஒளியாக உடையவன் இராமன் என்பது சிறப்புப் பொருள். தனது நற்குணங்களின் வடிவான சீதா தேவியையே தனக்கு ஒளியாக உடையவன் என்பது இதன் உட்கருத்து!

### புருஷோத்தமனுக்கு வெட்கமா?

சீதையும் இராமனும் தண்டகாரண்யத்துக்குள் நுழைந்தனர். ரிஷிகள் பலர் அவர்களை வணங்கித் தாங்கள் அரக்கர்களால் படும் துன்பங்களை விவரித்தனர். அதைக் கேட்ட இராமன் "உங்களைக் காப்பதில் காலம் தாழ்த்தி விட்டேனே" என்று எண்ணி, "ஒரு பெண்ணைப் போல் மிகவும் வெட்கப்படுகிறேன்" என்று கூறினார். தொண்டர்கள் தங்களைக் காக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் தலைவர்களுக்கு நடுவில், தொண்டர்களை, தான் காக்கத் தவறி விட்டோமோ என்று வெட்கப்படும் இராமன் தன் உயர்குணத்தால் ஒளிர்கிறான். தன் அடியார்களைக் காப்பதையே தன் இன்றியமையாத இனிய கடமையாகக் கொண்டவன் இராமன். விளக்கொளி வெளியிருளைப் போக்கும்; இராமனின் இனிய பண்பெனும் தூயபேரொளி உள்ளிருளான அறியாமையையே போக்கி விடும்!

### இராமனின் அம்பு வீணாகுமா?

வழிவிட வேண்டி இராமன் கடலரசனிடம் சரணாகதி செய்தான். மூன்று நாட்கள் ஆகியும் சமுத்திரராஜன் அலட்சியமாக இருக்கவே இராமன் கோபம் கொண்டு தன் வில்லில் அம்பைப் பூட்டினான். இது கண்டு அஞ்சிய கடலரசன் ஓடி வந்து இராமன் திருவடிகளில் பணிந்தான். அவனது குற்றத்தை உடனே மறந்து மன்னித்து இராமன் "சமுத்திர ராஜனே! உன் எதிரிகள் யாரேனும் இருந்தால் சொல், இந்த அம்பை அவர்கள் மேல் எய்கிறேன்" என்றார்.

இராமன் பூட்டிய அம்பு ஒரு நாளும் வீணாகாது; எனினும் தன்னை அண்டியவர்களின் குற்றத்தினைப் பொறுக்கும் உறுதியே இராமனின் சிறந்த குணம். சூரியன் கூட இரவில் ஒளி கொடுப்பதில்லை. ஆனால், சூரிய குலத்தில் பிறந்த இராமன் பொறுமை எனும் ஒளியால் உலகத்தை எப்போதும் பிரகாசமாக்குகிறார்.




## ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள்

14

### கருத்து

**ஒளியில்லையேல் சூரியன் இல்லை; சீதை இல்லையேல் இராமன் இல்லை; இறைத் தொண்டு இல்லையேல் ஆத்மா இல்லை.**

- ஸ்ரீ. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை.

**மேகத்துக்கு மின்னல்; சூரியனுக்கு ஒளி; இராமனுக்கு சீதை!**

இராமபிரான் மேகவண்ணன்; அவனுக்கு மின்னலைப் போல அழகும் ஒளியும் ஊட்டுபவள் சீதா பிராட்டி. மேலும், சூரியனும் ஒளியும் பிரியாதாப் போலே இராமனும் சீதையைப் பிரிவதில்லை. ஒளியால் சூரியனுக்குப் பெருமை; சீதையால் இராமனுக்குப் பெருமை. இராவணனுக்கு நன்மையை உபதேசித்த மாரீசன் "சீதையோடு சேர்ந்த இராமனின் தூயபேரொளி நம் புத்திக்கு எட்டாதது; அவனிடம் அபசாரப்படாதே" என்றான்.

இராமனின் அனைத்து குணங்களும் பிரகாசிப்பது சீதையின் தொடர்பால் என்பதையறிந்த வசிஷ்டர்அவளை இராமனுக்கு அருகில் ரத்ன சிம்மாசனத்தில் அமர்த்தி பட்டாபிஷேகம் செய்தார். "அயோத்யா சாம்ராஜ்ய பட்டாபிஷேகம்" என்று கூறுவதை விட "குண சாம்ராஜ்ய பட்டாபிஷேகம்" என்பதே இராமனின் பெருமைக்குப் பொருந்தும். அந்த குண சாம்ராஜ்யத்துக்குத் தலைவியே சீதாதேவி. இராமசூரியனுக்கே ஒளியூட்டுபவள் நம் அன்னை சீதா பிராட்டி அன்றோ!

**பூவுக்கு மணம்; ரத்னத்துக்கு ஒளி; ஆத்மாவுக்கு இறைத்தொண்டு!**

காட்டில் இராமன் இலக்குவனை குடிசை கட்டச் சொன்னான். இராமன் திருவுள்ளத்தில் எண்ணிய படியே பர்ணசாலை கட்டிய இலக்குவனை மெச்சிய இராமன் "நம் தந்தை உன்னை எனக்காகவே தன் ஸ்தானத்தில் விட்டுச் சென்றிருக்கிறபடியால், அவர் மரிக்கவேயில்லை; உன் வடிவில் என்னுடன் இருக்கிறார்" என்றார். கணநேரமும் இராமனை விட்டுப் பிரியாது தொண்டு புரியவே சுமித்ரை லக்ஷ்மணனைப் பெற்றாள். ஒரு ஜீவனுக்கு ஒளி என்பது இறைவனுக்குத் தொண்டு புரிதலே.

*வளரும்...*



## திருச்சானூரில் ஸ்ரீவரலக்ஷ்மி விரதம்

திருமலையப்ப ஸ்வாமியின் பட்டத்து ராணியான ஸ்ரீபத்மாவதி தாயார் கொலுவிருக்கும் திருச்சானூர் ஆலயத்தில் ஸ்ரீவரலக்ஷ்மி விரதம் மிகவும் சிறப்பான முறையில் வருடந்தோறும் தி.தி.தே. ஏற்பாடு செய்து நிகழ்த்தி வருகிறது. வரலக்ஷ்மி விரதத்தினன்று காலை நேரத்தில் தாயாரை சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட மேடையில் எழுந்தருளச் செய்து, கலச ஸ்தாபனம் செய்து ஆகம முறைப்படி வரலக்ஷ்மி விரதம் அனுஷ்டிக்கப் படுகிறது. இந்த விரதத்தில் பக்தர்களாகிய நாமும் அதற்கான கட்டணம் செலுத்தி பங்கு பெறலாம். அன்றைய தினம் விரதம் முடிந்த பின்னர் மாலை நேரத்தில் சஹஸ்ர தீபாலங்கார சேவையும், நான்கு மாட வீதிகளில் தாயார் புறப்பாடும் நடைபெறும். வரலக்ஷ்மி விரதம் வெள்ளிக்கிழமையில் கொண்டாடுவதால் அன்று அதிகாலையில் மூலமூர்த்தியான தாயாருக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். விரதத்தில் பங்கு கொண்டவர்களுக்கு பிரசாதமும் வழங்குவர்.

# ஆதிசேஷனின் அவதாரங்கள்



**வித்வான் வி.சுப்பிரமணிய ஐயர், உடுமலை**

திருமாலுக்கு நடந்து சென்றால் குடையாகவும், நின்றால் மரத்தினடி நிழலைப் போலவும், அமர்ந் தால் சிம்மாசனமாகவும், சயனித்தால் பாயாகவும் விளங்குபவன் ஆதிசேஷன். காற்றை மட்டுமே சுவாசித்து வாழும் நாகர் குலத்தைச் சேர்ந்தவன், கால் என்னும் உறுப்பு இல்லாதவன், பல படங்கள் விரித்த நிலையில் உள்ளவன். கண்ணும் செவியும் ஒன்றே ஆதலின் கட்செவி என்னும் பெயரையும் பெற்றான். சிறப்பான விசேஷ தெய்வாம்சத்தைக் கொண்ட ஆதிசேஷன் மீது ஸ்ரீமந்நாராயணன் அரி துயில் எனப்படும்யோக நித்திரை கொண்டிருக் கிறார்.

*''காலே மிகவுண்டு காலே இலாத*
*கணபணத்தின்*
*மேலே துயில் கொள் மாலோன்''*

என அருணகிரியாரும் இந்நிலையை எடுத்துக் கூறியுள்ளார்.

ஆதிசேஷனின் விஷமே மணிவிளக்காகப் பிரகாசிக்க, அந்த ஒளியிலே பாம்பரசன் மீது தியான யோகத்தையே துயிலாகக் கொண்டு திருப் பாற்கடலில் சயனித்திருக்கிறார் சேஷசாயி. அழகே கொஞ்சும் திருமாலின் அழகை ரசித்துக் கொண்டே தான் செய்யும் மிக உயர்ந்த சேவையை நினைத்து ஆனந்தம் அடைந்து அனந்தன் என்னும் பெயரோடு விளங்குகிறான் சேஷன். இப்படிப் பல சிறப்பு தெய்வங்களைச் சார்ந்து அவைகளுக்கும் சேவை செய்து உயர்ந்த பெருமையைத் தேடிக்கொண்டான்.

ஸ்ரீமந்நாராயணன் இராமாவதாரம் செய்த போது ஆதிசேஷன் அவருக்குத் துணையாக லக்ஷ்மணனாய் அவதரித்தான். இராமனாகப் பிறந்த பெருமாளைப் பிரிய மனமின்றியே லட்சுமணனாகப் பிறந்தான். இராமன் காட்டிற்குப் புறப்பட்டபோதே தாய் சுமத்திராதேவி லட்சுமணனை “இனியும் தாமதிக்காதே அவருடனே இப்போதே புறப்படு, அடியாரின் ஏவல் செய். இராமன் திரும்பிவந்தால் வா, இல்லையேல் அவனுக்கு முன்பாகவே உயிரை விட்டுவிடு” என்று சொல்லியனுப்பினாள். கானகத்தில் பல ஆண்டுகள் ஊண் உறக்கமின்றி வில்லும் அம்புமாக நின்று ஸ்ரீராமதம்பதிகளைப் பாதுகாத்து வந்தான் லக்ஷ்மணன். கடமை ஆற்றும் மன உறுதி அவனிடம் இருந்தது.

பகவான் ஸ்ரீகிருஷ்ணாவதாரம் செய்த காலத்தில் ஆதிசேஷன் அண்ணனாய் முன்பிறந்து நந்தகோகுலத்தைத் தூய்மைப்படுத்தி கிருஷ்ண னின் வருகைக்காகக் காத்திருந்தான். அண்ணன் பலராமனும் தம்பி கிருஷ்ணனும் கோகுலத்தில் விளையாடி மகிழ்ந்தார்கள். மகிழ்வித்தார்கள். தம்பி கிருஷ்ணன் விளையாடிய காலத்திலும் அண்ணன் பலராமன் அவனுக்கும் பாதுகாவலாக இருந்து வந்தான். கண்ணன் செய்த குறும்புத் தனங்களை அண்ணன் பலராமன் தடுத்துக்காத்துவந்தான். தம்பிக்குப் பக்கபலமாய் இருந்து பல அசுரர்க ளையும் பகைவர்களையும் தன் ஆயுதமான கலப்பையால் தாக்கி அழித்து வந்தான். எப்போதும் தம்பி கண்ணனுக்குத் துணையாகி நின்றான் ஆதிசேஷனாகிய பலராமன்.

அத்திரி முனிவருக்கு மகனாய்ப் பிறந்து பதஞ்சலி என்னும் பெயருடன் விளங்கினான்.

ஆதிசேஷனின் அவதாரமான பதஞ்சலி முனிவர் பல அம்சங்களில் ஒரு உதாரண புருஷராகவே விளங்கினார். நடராஜப் பெருமானின் டமருகத்திலிருந்து எழுந்த நாத ஒலியிலிருந்து பாணினி மஹரிஷி வியாகரண சூத்திரங்களை எழுதினார். அந்த வியாகரண சூத்திரங்களுக்கு அர்த்த விளக்கம் சொல்லி உலகு எங்கும் பரவச் செய்யும் பணியை நடராஜப்பெருமான் பதஞ்சலியிடம் ஒப்படைத்தார்.



சிதம்பரம் கோயில் ஆயிரம் கால் மண்டபத்தில் ஆயிரம் மாணவர்களுக்குப் பாடம் கற்பிக்க பதஞ்சலி தன் உண்மை வடிவான ஆயிரம் முகம் கொண்ட ஆதிசேஷனாக உருக் கொண்டு, திரை மறைவில் இருந்து பாடம் கற்பித்தார்.

கலியுகத்திலே பகவான் யாவருக்கும் எளிதில் தரிசனம் தந்து காத்தருள சரணாகத வத்ஸலனாய் இப்பூவுலகில் திருவேங்கடம் எனப்படும் திருப்பதி மலையில் எழுந்தருளி ஸ்ரீநிவாசனாக யாவருக்கும் சேவை சாதித்து வருகிறார். அவர் எழுந்தருளி இருக்கும் மலையும் ஆதிசேஷனின் அம்சமே. பகவான் ஸ்ரீமந் நாராயணன் எழுந்தருள்வதற்கு முன்பே இங்கு மலையாய் வந்து கிடக்க வேண்டினான். அவ்வாறே மலையாய் கிடக்க, அந்த மலைக்கு சேஷாத்ரி, சேஷகிரி என்ற பெயர்களும் உண்டு. திருவேங்கடமலை ஆதிசேஷனின் தலைப்பகுதி என்றும், உடலின் மத்திய பாகம் அஹோபிலம், வால் பாகம் ஸ்ரீசைலம் என்றும் கூறப்படுகிறது.

அந்த ஆதிசேஷன் ஸ்ரீபெரும்புதூரில் ஸ்ரீராமாநுஜராக அவதரித்து 74 பீடங்களை ஸ்தாபித்தார். அவைகளை நிர்வகிக்க சிம்மாசனாதிபதிகளையும் நியமித்தார். ஸ்ரீமந்நாராயணனைப் போலவே ஆதிசேஷனும் இவ்வுலகில் பல அவதாரங்களைச் செய்து பயனுடைய நன்மைகள் தரும் தர்மங்களைச் செய்துள்ளார்.

## கருடாழ்வார்



திருமலையில் எம்பெருமான் எழுந்தருளி அங்கிருந்து எங்கும் போகாமல் நீண்ட நாள் நின்று விட்ட காரணத்தால், திருமாலை விஷ்ணு லோகம் கொண்டு போய்ச் சேர்க்க, கருடாழ்வார் அம்மலையை அப்படியே பெயர்த்தெடுக்க முற்பட்டபோது திருமால் கருடனைத் தடுத்து, உலகை ரக்ஷிக்க தாம் சில காலம் இம்மலையில் இருக்கப் போவதாகவும், அதுவரையில் இம்மலையின் தெற்குத் தாழ்வரையில் நித்ய வாசம் செய்ய கருடனுக்கு ஆணையிட்டதாகவும் "வாமன புராணம்" கூறுகிறது. இதனால் கருடாத்ரி, கருடாசலம் என்றும் திருமலைக்குப் பெயர்கள் உண்டு.திருவேங்கடவனுக்கு கருடன்தான் கொடியாக இருக்கிறார். இதையே ஆண்டாள் தம் பாசுரத்தில் *''ஆடும் கருடக் கொடியுடையார்''* என்று பாடுகிறார். *''ஓம் கருடஸ்கந்த வாஸிநே ஸ்ரீவெங்கடேசாய நம:''* என்பது திருவேங்கடவனின் 108–திருநாமங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. எனவேதான் கருடாழ்வாரின் செயற்கரிய செயல்களைக் கண்ட திருவேங்கடவன் புரட்டாசி திருவோணத் திருவிழா வில் "கருட வாகனம்" கொண்டு காட்சி தருகிறார். இதையே, *''பறவையேறு பரம்புருடா''* என்று பெரியாழ்வாரும், *''அசுரர் மங்கக் கடாவிய வேகப் பறவையின் பாகன்''* என்று பராங்குச நாயகியும் மங்களாசாசனம் செய்து அருளுகிறார்கள்.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 73

### இடமிருந்து வலம்


1. திருமலையப்பனுக்கு கீர்த்தனைகளால் பாமாலைச் சூட்டியவர்.....(9).
4. கோதை.....(4)
5. கிருஷ்ண கர்ணாமிர்தம் பாடியவர்.....(5)
8. சாரங்கபாணியை எழ வைத்த ஆழ்வார்.....(9)
9. பாணர் குடியில் பிறந்து ஸ்ரீரங்கநாதரிடம் கலந்தவர்....(8)
11. உடுப்பியில் தோன்றிய ஆசாரியர்......(8)
13. வடக்கில் பிறந்த ஆண்டாள்....(4)
15. அயோத்தியில் அமர்ந்து இராமாயணம் படைத்தவர்.....(6)
19. முதலாழ்வார்களில் ஒருவர்........(5)
22. மாற்று மதத்தில் ஜனித்த ராம பக்தர்......(6)

### வலமிருந்து இடம்

3. இவரது பணியாளாய் கண்ணன் இருந்தான்....(5)
6. புளிய மரத்தில் இருந்து புகழ் கொண்ட ஆழ்வார்.....(6)
12. எத்திராஜர் (துறவிகளின் அரசர்)....(5)
14. பாண்டுரங்கனுக்கு சேவை செய்த பக்தை....(4)
18. புவனகிரியில் பிறந்த புனிதர்....(7)
20. பண்டரீபுர பாண்டுரங்கனின் பரம பக்தர்....(5)
22. இராமாயணத்தைத் தமிழில் தந்தவர்....(4)

### மேலிருந்து கீழ்

2. கலகக்கார நாராயண பக்தர்.....(4)
7. பல்லாண்டு பாடிய ஆழ்வார்....(6)
8. பெருமாளிடமே வழிப்பறி செய்த ஆழ்வார்....(9)



தொகுப்பு :
**திரு. டி. ஆர். மனோகர், தஞ்சாவூர், 99426 44807**

புதிருக்கு விடை அறிய 50ம் பக்கம் பார்க்கவும்...

### கீழிருந்து மேல்

10. நரசிம்ம அவதாரத்திற்கு காரணமான பக்தன்....(6)
16. சத்ரபதி சிவாஜியின் குரு.....(5)
17. இராமாயணத்தை முதலில் படைத்த முனிவர்....(4)
20. குருவாயூரப்பனைப் பாடிப் பரவசமானவர்....(8)
21. மகாபாரதத்தைத் தந்த மகாமுனிவர்....(4)

### தடை விதிக்கப்பட்ட பொருட்கள்

**திருமலை ஆலயத்திற்குள் தேங்காய், செல்போன், டிஜிட்டல் கைகடிகாரங்கள் போன்ற மின்னணு பொருட்கள், காலணிகள், வெடிப்பொருட்கள், பிளாஷ்டிக் பொருட்கள் எடுத்து செல்லுதல் கூடாது**



# ஜோதிட சாஸ்திரம்

# "குரு"

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

திருவாலங்குடி ஆலயத்திலிருந்த சுந்திரரின் அழகிய சிலையின் கலையழகில் மயங்கிய ஒரு மன்னன் அதை திருவாரூருக்கு எடுத்துச் சென்றான். அதை ஏற்கமுடியாத இக்கோயில் அர்ச்சகர் திருவாரூர் சென்று அச்சிலையை மறைத்து எடுத்துவந்து மீண்டும் இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்தார்.

சிலையை எடுத்து வரும்போது காவலர் கேட்க, அம்மை கண்ட தன் குழந்தையை மூடி மறைத்து எடுத்துச் செல்கிறேன் என்று கூறி எடுத்து வந்தாராம். ஆலங்குடி வந்து பார்த்த போது சிலைக்கே அம்மை போட்டிருந்ததாம். இந்த நிகழ்வை குறிக்கும் விதமாக இன்றும் அச்சிலை அம்மைத் தழும்புகளுடன் உள்ளதை காணலாம். இந்த அற்புத சுந்தரர் சிலை ஏனைய உற்சவர் சிலைகளுடன் ஆலயத்தில் உள்ளது.

சுக்ரவார அம்பிகை: சுக்ரவாரம் என்றால் வெள்ளிக் கிழமை, இந்நாளில் அம்மனுக்கு விசேஷம் என்பது அனைவரும் அறிந்த உண்மை. அந்த வெள்ளியின் பெயரையே தாங்கி தனி சன்னதி ஒன்றில் அழகே உருவான அம்பிகை அருள்பாலிக்கிறாள். இவளது பெயரும் சுக்ரவார அம்பிகை என்பது குறிப்பிடத் தக்கது.

இக்கோயிலின் அமைப்பு மாதா பிதா குரு என்ற வரிசையில் அமைந்துள்ளது. அதாவது முதலில் அம்பிகை, அடுத்து சுவாமி, இதன் பின்னர் குரு என்றமர்ந்து மாதா பிதா குரு என்ற வார்த்தை பிரயோகத்திற்கு பொருத்தமாக உள்ளது.

## ஒவ்வொரு வீட்டிலும் குரு இருந்தால் என்ன பலன்

இனி குருவைப் பற்றிப் பார்க்கலாம். நவக்கிரகங்களில் முழு சுபர் என்றழைக்கப்படுபவர் குருபகவான். இவர் நல்ல நிலைமையில் இருந்தால் எவ்வளவு பெரிய பிரச்சனைகளையும் எதிர் கொள்ளலாம். திருமணம், குழந்தை பாக்கியம், பணவரவு ஆகியவற்றிற்கு இவர் காரகராவார். இவரின் கருணை இருந்தால்தான் வீட்டில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும்.

ஒருவரின் ஜாதகத்தில் குரு முதலாவது வீட்டில் இருந்தால் அவர் நல்ல தோற்றத்துடன் நீண்ட ஆயுள் கொண்டவராக இருப்பார். அவருக்கு குணவதியான மனைவி அமைவாள். ஜாதகருடன் தொடர்பில் இருப்பவர்கள் சிறந்த ஆன்மீக வாதியாக இருப்பார்கள். பூர்வ புண்ணிய பாக்கியமும், குழந்தைபேறும் கிடைக்கும். இவர்களது குழந்தைகள் அறிவில் சிறந்தவர்களாக விளங்குவர். தந்தை இவருக்கு உதவி புரிவார்.

குரு இரண்டாவது வீட்டில் இருந்தால் ஜாதகர் கல்வியிலும் வாக்கு வன்மையிலும், சிறந்து விளங்குவர். இவரது பேச்சுக்கு சமுதாயத்தில் மதிப்பும் இருக்கும். நல்ல தோற்றத்துடன் நீண்ட ஆயுள் கொண்டவராக இருப்பார். இவருக்கு கையிருப்பில் எப்பொழுதும் பணம் வந்துக் கொண்டிருக்கும். இவரது நண்பர்கள் வியாபாரத்தில் சிறந்து விளங்குவர். சிறந்த ஆன்மீகவாதியாக இருப்பார். குழந்தைபேறு கிடைக்கும். குரு மூன்றாம் வீட்டில்

இருந்தால் பக்தியில் ஈடுபாடு இருக்கும். இளைய சகோதரர் நல்ல முன்னேற்றம் பெறுவார். அவர் மூலம் ஜாதகருக்கு நன்மை கிடைக்கும். எதிர் பாலினத்தவரிடம் மோகம் ஏற்படும். அளவோடுதான் மகிழ்ச்சி இருக்கும்.

குரு நான்காம் வீட்டில் இருந்தால் தாய் நல்ல நலத்துடன் இருப்பார். குழந்தை பாக்கியம் தாமதமாக இருக்கும். குழந்தைகள் மூலம் நல்ல விஷங்கள் நடக்காது. பகைவர் உண்டாவர்கள். விவசாய குடும்பமாக இருந்தால் விவசாயம் மூலம் நல்ல வருமானம் கிடைக்கும். குரு ஐந்தாம் வீட்டில் இருந்தால் புத்திர பாக்கியம் கிடைக்கும். புத்திரர்களால் நல்ல நிலைமைக்கு வரலாம். நுண்ணிய அறிவு இருக்கும். குல தெய்வத்தின் அருள் கிடைக்கும். திடீர் பண வரவுகள் இருக்கும். குரு ஆறாம் வீட்டில் இருந்தால் பகைவரை வெற்றிக் கொள்ளலாம். சமுதாயத்தில் மதிப்பு இருக்காது. குழந்தை பாக்ய தடையை ஏற்படுத்துவார். மங்கலகரமான நிகழ்ச்சிகள் நடைபெற காலதாமதமாகும். உடல்நிலை பலவீனமாக இருக்கும்.



குரு ஏழாம் வீட்டில் இருந்தால் உடல் நலம் நன்றாக இருக்கும். சமுதாயத்தில் புகழ் கிடைக்க வழிவகை செய்வார். நல்ல தோற்றத்துடன் மனைவி அமைவாள். மனைவியாக வருபவர் ஆன்மீக குடும்பத்திலிருந்து வருபவராகவும், சிறந்த ஆன்மீகவாதியாகவும் இருப்பார். இவர்களிடம் தொடர்பு வைத்திருப்பவர்கள் மதகுருமார்களாக இருப்பார்கள். குரு எட்டாம் வீட்டில் இருந்தால் மனைவி அமைவது கஷ்டமாக இருக்கும். ஒருவழியாக திருமணம் நடந்தேறினால் மனைவியின் உடல்நிலை பாதிக்கப்படும். செல்வநிலை இருக்கும், சோதிடத்துறையில் பாண்டித்துவம் ஏற்படும். மரண வீட்டை குறிப்பதால் உயிர்வாதை இல்லாமல் உடனே போகும்.

குரு ஒன்பதாம் வீட்டில் இருந்தால் நல்ல பாக்கியம் கிடைக்கும். மிக உயர்ந்த பதவியில் இருப்பார். மிகப்பெரிய மடாதிபதிகளின் தொடர்பு ஏற்படும். மிக உயர்ந்த படிப்புகள் எல்லாம் படிப்பார்கள். வெளிநாடு செல்ல வைப்பார். அதன் மூலம் பண வரவு இருக்கும். குலதெய்வ அருள் கிடைக்கும். மந்திரவித்தை நன்றாக இருக்கும். குரு பத்தாம் வீட்டில் இருந்தால் நல்ல தொழில் அமையும். செல்வநிலை உயரும். அரசாங்கத்தில் நல்ல பெயர் கிடைக்கும். சுற்று வட்டாரங்களில் மதிப்பு இருக்கும். வருமானத்தைப் பெருக்குவார். கோயில் சம்பந்தப்பட்ட இடங்களில் வேலைக்கு அமர்த்துவார்.

குரு பதினோராம் வீட்டில் இருந்தால் தொழிலில் நல்ல வருமானம் கிடைக்கும். நல்ல நண்பர்கள் அமைவார்கள். வாகன வசதிகள் ஏற்படும். எந்த வேலையை எடுத்தாலும் வருமானத்திற்கு குறைவு இருக்காது. குழந்தை பாக்கியம் இருக்கும். குரு பன்னிரண்டாம் வீட்டில் இருந்தால் ஒழுக்கத்தை கடைபிடிக்க மாட்டார். புண்ணிய இடங்களுக்கு அதிகம் செல்ல வைப்பார். குழந்தை பாக்கியத்தில் குறை இருக்கும். சிலர் பக்திமானாக நடிப்பார்கள். கோயில் கட்டுதல் குளம் வெட்டுதல் போன்றவற்றில் ஈடுபடவைப்பார். பண விரயம் ஏற்படும்.

**நல்ல மனைவி அமைய குருவை வழிபடுவதற்கான சுலோகம்:**

*ஓம் குருதேவாய வித்மஹே பரப்ரஹ்மாய தீமஹி*
*தன்னோ குருஹ் ப்ரசோதயாத்*
*ஓம் சுராசார்யாய வித்மஹே தேவபூஜ்யாய தீமஹி*
*தன்னோ குருஹ் ப்ரசோதயாத்*
*ஓம் குருதேவாய வித்மஹே பரப்ரஹ்மாய தீமஹி*
*தன்னோ குருஹ் ப்ரசோதயாத்*
*ஓம் சுராசார்யாய வித்மஹே மஹாவித்யாய தீமஹி*
*தன்னோ குருஹ் ப்ரசோதயாத்*
*ஓம் அங்கிரஸாய வித்மஹே சுராசார்யாய தீமஹி*
*தன்னோ ஜீவஹ் ப்ரசோதயாத்*

# நாள் பூராவும் திறந்திருக்கும்

# திருவார்ப்பு ஸ்ரீகிருஷ்ணன் கோயில்

நெய்வாசல் நெடுஞ்செழியன்,
சிதம்பரம்,94434 25862

*"அடையாத கதவிருக்கு ஆலயத்திலே
அன்னையைப் போல அன்பிருக்குது
அவனிடத்திலே
மகளே உன் மனக்குறையை அவனிடம் கூறு
கடவுளுக்குத்தான் கருணையென்று மற்றொரு
பேரு."*

இது காலஞ்சென்ற திரைக்கவிஞர் கவிஞர் கண்ணதாசன் ஒரு திரைப்படத்துக்காக எழுதிய பாடல் வரிகள். இறைவனை நம்பியவர்களுக்கு எப்பொழுதும் அவனது அருள் கிடைக்கும் என்ற பொருளில் ஆலயக்கதவுகள் எப்பொழுதும் அடைக்கப்படுவதில்லை என்று அவர் எழுதினாலும் கூட, அவர் கூற்றுப்படி அடையாத (நடை சாத்தாத) ஆலயங்கள் எதுவுமில்லை. ஏறக்குறைய தமிழ் நாட்டில் அனைத்து ஆலயங்களும் காலை 6.00 மணியிலிருந்து மதியம் 12.00 மணி வரையிலும், மாலை 4.00 மணியிலிருந்து இரவு 8.00 மணி வரையிலுமே பக்தர்கள் தரிசனத்துக்காக திறந்து வைக்கப்படுகின்றன. சில மாநிலங்களில் இது மாறுபடலாம். ஆனால், மூடுவது என்ற பேச்சுக்கே இடமில்லாமல் நாள் பூராவும் பக்தர்கள் வழிபாட்டிற்காக திறந்து வைக்கப்படுவது கேரள மாநிலம் கோட்டயத்தை அடுத்துள்ள திருவார்ப்பூ என்ற ஊரில் அமைந்துள்ள ஸ்ரீகிருஷ்ணர்கோயில் மட்டும்தான்.

பொதுவாக எல்லா இந்துக் கோயில்களும் இரவில் மூடப்படுவது வழக்கம். ஆனால், திருமலை போன்ற சில கோயில்களுக்கு அதிக பக்தர்கள் வருகை தருவதால் நள்ளிரவு வரை திறந்து வைக்கப்பட்டு பின்னர் மூடப்பட்டு அதிகாலை இரண்டு மணிக்கு மீண்டும் திறக்கப்படுவது வழக்கம். சூரிய மற்றும் சந்திர கிரகணம் நிகழும் நேரத்தில் அனைத்து ஆலயங்களும் மூடப்பட்டு, கிரகணம் முடிந்த பிறகு சுத்தம் செய்து சிறப்புப் பூஜை நடத்திய பின்னரே பக்தர்கள் வழிபாட்டிற்கு அனுமதிப்பது வழக்கம். இந்த விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு எல்லா நாட்களிலும் எல்லா நேரங்களிலும் திறந்திருக்கக் கூடிய அபூர்வ ஆலயமாக இது திகழ்கிறது.

## தல வரலாறு:

பன்னிரண்டு ஆண்டு கால வனவாசத்திற்குச் சென்ற பாண்டவர்களின் வழிபாட்டிற்காக தனது உருவச்சிலை ஒன்றை கொடுத்து அவர்களை வழி அனுப்பி வைத்தார் ஸ்ரீகிருஷ்ணர். அதை பெற்றுக் கொண்டு புறப்பட்ட பாண்டவர்கள் தங்களது வனவாச காலம் முழுவதும் அந்த சிலைக்கு அபிஷேக ஆராதனைகள் நடத்தி வழிபட்டு வந்தனர். வனவாசம் முடிந்து, நாட்டிற்கு திரும்ப இருந்த நிலையில் கடைசியாக அவர்கள் தங்கியிருந்த சேர்தலா பகுதியைச் சேர்ந்த மக்கள் அந்த கிருஷ்ணர் சிலையை தங்களது வழிபாட்டிற்கு தந்துச் செல்லுமாறு வேண்ட, பாண்டவர்களும் அச்சிலையை அவர்களிடம் தந்துவிட்டு அஸ்தினாபுரம் நோக்கிப் புறப்பட்டனர். சிலையைப் பெற்றுக் கொண்டவர்கள் ஆலப்புழை மாவட்டம் முஹம்மாவில் ஏற்கெனவே வழிபாட்டிலிருந்த கோயிலொன்றில் அந்த விக்ரகத்தை அமைத்து வழிபட்டு வந்தனர். காலப்போக்கில் பல்வேறு காரணங்களால் அதை வழிபட முடியாமல் போகவே வேம்ப நாட்டு ஏரியில் ஜலவாசத்தில் அதை சேர்த்தனர்.

இது நடந்து முடிந்து பல்லாண்டுகளுக்குப் பிறகு, இன்றைக்கு சுமார் 1,500 ஆண்டுகளுக்கு

முன்னர் முனிவர் ஒருவர் படகு பயணமாக வேம்பநாடு ஏரியின் கிழக்கு பகுதிலிருந்து மேற்கு பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது அவர் சென்ற படகு ஓரிடத்தில் நகராமல் நின்றது. திடீரென்று ஏரியின் நீர்மட்டம் குறைந்த துடன், ஜலவாசத்திலிருந்து ஸ்ரீகிருஷ்ணர் சிலையும் அவரது கண்ணில் தென்பட்டது. முனிவர் படகை விட்டு இறங்கி சிலையை எடுத்துக் கொண்டு மேற்கு திசையில் தன் பயணத்தைத் தொடர்ந்தார். ஆனால், படகு மேற்கு நோக்கிச் செல்லாமல் கிழக்காக தானே திரும்பி குன்னம் பள்ளிக்கரா வழியாக பயணித்து , தற்போது ஆலயம் இருக்கும் இடத்தை அடைந்து நின்றது. படகு தானாக திரும்பி பயணித்தது முனி வரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இது இறைவனின் திருவுள்ளம் போல என்றெண்ணி நெல் வயல்கள் நிறைந்த அப்பகுதியில் விக்ரகம் எதுவுமில்லாம லிருந்த ஒரு ஆலயத்தில் ஸ்ரீகிருஷ்ணரை பிரதிஷ்டை செய்தார். மற்றொரு வரலாற்றில் முனிவருக்குப் பதிலாக வில்லுய மங்கலம் சுவாமி அய்யர் என்பவர் பெயர் இடம்பெற்றுள்ளது. இப்படி திருவாகிய கடவுளை கண்டெடுத்து வார்த்த பகுதியாதலால் அந்த ஊருக்கு திருவார்ப்பு என்ற பெயர் ஏற்பட்டது.

**தலச்சிறப்பு:**

கம்சனைக் கொன்ற பிறகும் கோபம் தணி யாத தோற்றத்தை இந்த ஸ்ரீகிருஷ்ணரின் திரு மேனி பிரிதிபலிப்பதாகவும், கோபத்திலிருப் போர் அதிக பசியுடன் இருப்பார்கள் என்று இப்பகுதி மக்கள் கருதுவதால், கோபத்தை சாந்தப்படுத்த தினசரி மூலவருக்கு அபிஷேகம் முடித்தபின் உஷைபாயசம் என்னும் நைவேத்தியம் வைத்து ஆரத்தி காட்டப்படுவதுடன் அவரது தலையும் துவட்டிவிடப்படுகிறது. கிருஷ்ணர் பசி பொறுக்கமாட்டார் என்பதான நம்பிக்கைக் காரணமாக ஆலயம் இரவு பகலாக திறந்து வைக்கப் பட்டுள்ளது. ஆனால், கிருஷ்ணர் உறங்க வேண்டுமே! அதற்காக இரவு 11.58க்கு நடை சாத்தப் பட்டு 12.00 மணிக்கு மீண்டும் திறக்கப்படுகிறது. அப்படி சாத்தப்படும் நேரம் இரண்டு நிமிடத்திற்கு மேல் நீடிக்கக் கூடாது என்பதற்காக தந்திரியிடம் ஒரு கோடாலி தரப்படுகிறது. ஏதாவது காரணங்களால் கதவு திறக்க முடியாமல் போனாலோ அல்லது தாமதம் ஏற்பட்டாலோ கதவை உடைத்துத் திறக்க அனுமதிக்கப்படுகிறது.

இவ்வாலயத்தின் மற்றொரு சிறப்பாக சூரிய சந்திர கிரகணத்தின் போதும் கோயில் மூடப்படா ததைக் கூறலாம். இதற்கும் கிருஷ்ணரின் பசி பொறுக் காமையே காரணமாகக் கூறப்படுகிறது. ஒரு கிரகணத்தின்போது காலை நேரத்தில் ஆலயம் மூடப் பட்டது. மாலை கதவைத்திறந்தபோது கிருஷ்ணரின் இடுப்புப்பட்டை கழன்றுக்கிடந்ததைக் கண்டனர். அந்த சமயத்தில் ஆலயத்திற்கு வருகைதந்த ஸ்ரீஆதிசங்கரர் கிருஷ்ணர் மிகவும் பசியாக இருந்தக் காரணத்தால் தான் அவ்வாறு நிகழ்ந்தது என்று கூறவே அன்றிலிருந்து கிரகணத்தின் போதும் ஆலயம் மூடப்படுவதில்லை.





# காயத்ரியில் மிளிரும் வேங்கடவன்

திரு.கே.ஸ்ரீநிவாசன்,
சேலம், 92444 47060

உலகில் அநேக மந்திரங்கள் தியானிக்கப்பட்டு, உபதேசிக்கப்பட்டு அதற்கு உண்டான பலனை அந்த கர்த்தா (மந்திரத்தை மனனம் செய்பவன்) அடைகிறான். உலகில் எல்லா மந்திரத்திற்கும் தாயாக கருதப்படுவது "ஓம்" எனும் ப்ரணவ மந்திரமாகும். எல்லா மந்திரங்களும் "ஓம்" என்று ஆரம்பித்து உபாசிக்க, உபதேசிக்கப்படுகின்றன.

இந்த "ஓம்" எனும் ப்ரணவ மந்திரமானது, "அ,உ,ம" என்ற மூன்று எழுத்தின் கூட்டேயாகும். "அ" என்பதால் விஷ்ணுவைக் குறிக்கிறது. "ம" என்பதால் ஜீவனைக் குறிக்கிறது.

"உ" என்பதால் அகாரத்தால் உணரப்படும் எம்பெருமானையும், மகாரத்தால் உணரப்படும் ஜீவனையும் சேர்த்து வைக்கின்ற புருஷகார பூதையான பெரிய பிராட்டியைக் குறிக்கிறது.

இங்கு நாம் காணப்போவது காயத்ரி மந்திரத்தைப் பற்றியே. பகவான் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு கீதை அருளும்போது விபூதி யோகத்தில் தான் யார் யாராக, என்னென்னவாக இருக்கிறான் என்பதை கீதையின் வாயிலாக நமக்கு காட்டி அருளினான். தான் வேதங்களில் சாமவேதம் என்றும், மந்திரங்களில் "காயத்ரி" என்றும் திருவாய் மலர்ந்தருளினான்.

மேலும், வேதம் "ஓம்" என்று ஆரம்பித்தே ஓதப்படுகிறது. கானம் செய்யப்படுகிறது. அதற்கு "உத்கீதம்" என்று பெயர். பூதங்களின் ரசம் சிறந்த பகுதி மண், மண்ணின் ரசம் – நீர், நீரின் ரசம் – தாவரம், தாவரங்களின் ரசம் – மனிதன், மனிதனின் ரசம் – வாக்கு, வாக்கின் ரசம் – ருக், ருக்கின் ரசம் – சாமம், சாமத்தின் ரசம் – உத்கீதம் (ஓங்காரம்).

இதில் வாக்கு என்பதற்கு பொருளாராய்ந்தால்,

*"காயத்ரீ வா இத:*
*ஸர்வம் பூதம் யதிதம் கிஞ்ச*
*வாக்வை காய்த்ரீ,*
*வாக் வா இத ஸர்வம்*
*பூதம்*
*காயதி சத்ராயதே ச"*

சாந் (12.1)

இங்கு எது உண்டோ அது எல்லாம் காயத்ரியே. இதை எல்லாம் (காயதி) பாடுவதாலும், பேரிட்டுப் பேசுவதாலும் (த்ராயதேச) போற்றிக் காப்பதாலும் "வாக்கே ப்ரத்யஷ்யமான காயத்ரி"

"சந்தங்களுக்குள் நான் காயத்ரி எனும் சந்தமாக இருக்கிறேன்" என்று பகவான் கீதையில் உரைக்கின்றார்(கீ.10.35).

காயத்ரி மந்திரமாவது,

*"ஓம் பூர்புவஸ்ஸுவக தத்சவிதுர் வரேண்யம்*
*பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோன*
*ப்ரசோதயாத்"*

இந்த மந்திரத்தில் *"தத்சவிதுர் வரேண்யம்"* எனும் வாக்யம் தரும் பொருளானது சூரிய மண்டலத்தின் நடுவே பொன்னைப் போன்று ஜொலிக்கின்ற திருவடிவுடைய நாராயணனாகிய உன்னை (தியோயோன –) தியானிக்கிறேன். ப்ரசோதயாத் – என்னுடைய அறிவை தூண்டுவாயாக என்று பொருள்.

*ஸ யச்சாயம் புருஷே* (தைத் 2.8) இந்த புருஷனிடம் உள்ளவன் யவனோ, சூரியனிடம் உள்ளவன் யவனோ அவன் ஒருவனே. அவனே பரப்ரும்மம் ஆகிய நாராயணன்.


இந்த காயத்ரி மந்திரத்தை தத்வ ஞானத்துடனும் ச்ரத்தையுடனும், முறைப்படியும் தேக, ஆத்ம சுத்தியுடனும் காலப்ரமானம் அறிந்தும் உபாசிக்க வேண்டும். அதுவே மிகுந்த வீர்யம் உடையதாகிறது

## தியான சுலோகங்கள்

கர்மணா மநஸா வாசா
ப்ராணிநாம் யோ ந ஹிம்ஸக: |
பாவ பக்தச்ச கோவிந்தே
தைத்ய பாகவதோ ஹி ஸ: ||

**தன் உயிரை காப்பது போலவே மற்ற உயிர்கள் இடத்திலும் அன்புடன் நடந்து கொள்ள வேணும். எல்லா உயிர்களிடத்திலும் தெய்வம் உள்ளது என்பதை தெரிந்துக் கொண்டு தீமை செய்தல் ஆகாது.**

**தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.**



என்பது தேறுகிறது. மேலும் இந்த காயத்ரி உபாசனை தராத பேரில்லை எனலாம். மேலும், ரிஷிகளும், ஞானிகளும், யோகியர்களும் இந்த காயத்ரி மந்திரத்தைப் பற்றி சொல்லும் போது,

“கங்கை போன்ற தீர்த்தமும், கோவிந்தன் போன்ற தெய்வமும், காயத்ரி போன்ற மந்திரமும் உலகில் இல்லை” என்பார்கள். மேலும், ரிஷிகளும், ஞானிகளும் மேலே குறிப்பிட்டுள்ளபடி “கோவிந்தன் போன்ற தெய்வம் இல்லை” சூரிய மண்டலத்தின் நடுவே பொன்னைப்போல் ஜொலிக்கின்ற திருவடிகளை உடைய நாராயணன் வேறு யாருமல்ல அவன் இக்கலியுகம் முழுதும் இந்த புவியில் நின்று தன்னை நாடி வரும் பக்தர்களின் குறைகளை களைந்து நிறைகளை அருள திருவேங்கடத்தில் நின்றருளும் வேங்கடவனே என்பதை உணரலாம்.



திருவேங்கடவன் காயத்ரியில் மட்டும் மிளிர்பவனல்ல. அவன் வேதத்தையே தரித்துக் கொண்டிருப்பவன் என்பதை திருவேங்கடவனின் பரம் கிருபைக்கு பாத்திரமான அன்னமய்யா கீர்த்தனைகளிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

நாராயணதே நமோ நமோ என்ற கீர்த்தனையில் *“வேதோத்தர திருவேங்கடநாயக”* எனப் பாடியுள்ளார். ஆக, காயத்ரியில் மிளிரும் வேங்கடவனும், வேதத்தை தரித்துக் கொண்டிருக்கும் வேங்கடவனும் ஒன்றே. அந்த நெடியோன் திருப்பாதம் பணிந்து உய்வோமாக.

## மங்கள சுலோகங்கள்



*கருணாபாராவார வருணாலயகம்பீர |*
*நாராயண நாராயண நாராயண நாராயண*
*ஜய கோபாலஹரே ||*



**கருணைக் கடலே! சமுத்திரம் போல**
**கம்பீரமானவனே! நாராயணனே! கோபால! ஹரி!**
**(உனக்கு) வெற்றி.**

# கணபதியின் வடிவங்கள்

ஸ்காந்த, சிவ, விநாயக புராணங்களின் படி முப்பத்திரண்டு வடிவில் கணபதிகள் உள்ளனர். அவற்றின் விரிவிக்கஞ்சி பதினாறு கணபதிகள் காட்சியாக்கப்பட்டுள்ளனர். மேலும், ஏகாக்ஷர, வரத, த்ரையக்ஷர, க்ஷிப்ர ப்ரசாத, ஹரித்ர, ஏகதந்த, சிருஷ்டி, உத்தாண்ட, ருணவிமோசன, துந்தி, த்விமுக, த்ரிமுக, சின்ஹ, யோக, துர்கா, சங்கடஹர கணபதிகள் உள்ளனர்



## பால கணபதி

தினமும் 32 முறை தியான சுலோகம் படித்து 21 முறை இவரை துதித்தால் நினைவாற்றல் பெருகும்.

## தருண கணபதி



தினமும் 32 முறை தியான சுலோகத்தால் துதித்தால் வெற்றிக்குத் தேவையான அருள் மற்றும் மனதைரியம் பெற்று சித்தி கிடைக்கும்.



## பக்த கணபதி

பக்த கணபதியை வழிபடுபவர்களுக்கு பக்திப் பெருகி சித்தி கிடைக்கும்.

## வீர கணபதி



வீர கணபதியை தியானித்து வழிபாடு செய்யும் பக்தர்களுக்கு தைரியம் கிடைக்கும்.




## சக்தி கணபதி

சக்தி கணபதியைத் தியானித்து வழிபாடு செய்தால் மனோதைரியம் பெருகும்.

## த்விஜ கணபதி



த்விஜ கணபதியை தியானித்து வழிபாடு செய்தால் நன்றாக சிந்திக்கும் திறன் மேம்படும்.



## சித்தி கணபதி

சித்தி புத்திகளை தன் சக்திகளாக உடைய சித்தி கணபதியைத் தியானித்து வழிபட்டால் தோல்வியற்ற வெற்றிகளையே வாரி வழங்குவார்.

## உச்சிஷ்ட கணபதி




மந்திர மூர்த்தியான இவரை வழிபட்டால் கோரிக்கைகளை நிறைவேற்றுவார். இவருக்கு தியான வழிபாடு சிறந்தது.

## விக்ன கணபதி

விக்ன கணபதியை வழிபட்டால் வழிபடும் பக்தர்களின் விக்னங்களை(தடைகளை)ப் போக்கி வெற்றியை வழங்கிடுவார்.






## க்ஷிப்ர கணபதி

க்ஷிப்ர கணபதியை வழிபடுவதன் மூலம் நம் விருப்பங்கள் சித்திக்கும்.

## ஹேரம்ப கணபதி

ஹேரம்ப கணபதியை வழிபடுவதினால் விருப்பமான சித்தி கிடைக்கும்.





## ஸ்ரீலக்ஷ்மி கணபதி

ஸ்ரீலக்ஷ்மி கணபதியை வழிபடுவதால் தன தான்யங்களை மிகுதியாகக் கிடைக்கப்பெறுவர்.



## மஹா கணபதி

மஹா கணபதி பக்தர்களுக்கு காமதேனுவாக அனைத்து துன்பங்களிலிருந்தும் குடும்ப இன்னல்களிலிருந்தும் விடுவித்து அருள் புரிவார்.




## விஜய கணபதி

விஜய கணபதியை தியானித்து வழிபட்டு வந்தால் அனைத்தும் வெற்றியாகவே அமையும்.



## ந்ருத்த கணபதி

கல்ப விருக்ஷத்தின் கீழ் வீற்றிருக்கும் இவரை வணங்கி வந்தால் மகிழ்ச்சியும், மன அமைதியும் கிடைக்கும்.



## ஊர்த்தவ கணபதி

ஊர்த்தவ கணபதியை வழிபடுவதன் மூலம் பாவங்கள், துன்பங்கள், சிறை வாசத்திலிருந்தும் விடுதலை பெறலாம்.

புகைபட உதவி : கந்துகூரி வேங்கட சத்திய ப்ரஹ்மாச்சார்யா



நீதிக்கதைகள்

# தெய்வ தரிசனம்

அம்பிகைபாகன்,
கோவை

புறக் கண்களால் இறைவனைக் காணமுடியுமா? முடியாது. இறைவனை நமக்குள்ளேதான் காண இயலும், நமக்குள்ளே இறைவனைக் காண வேண்டுமாகில் நம் இதயத்தில் நான் என்ற அகங்காரம் ஒழிய வேண்டும். சுயநலம், பேராசை, என்னுடையது என்னும் மமகாரம் இவை யாவும் அழிந்து மனம் தூய்மை பெற வேண்டும். இவை யாவுமே நம்முடைய உண்மையான விரோதிகள். இந்த எதிரிகளை நாமேதான் உண்டாக்கு கிறோம். நமக்குநாமே பகைவன். பகைவர்கள் நமக்கு வெளியே இல்லை. உள்ளேதான் இருக்கிறார்கள்.

ஆசைகளை வளர்த்துக் கொண்டு அவற்றை பூர்த்தி செய்ய அல்லல் படுகிறோம். இதனால் மன அமைதியை இழந்து, கர்ம பந்தங்களால் பாவ புண்ணியங்களை சம்பாதித்துக் கொண்டு, மீண்டும் மீண்டும் பிறந்து மடிகிறோம். இச்சுழற்சி நிற்பதில்லை. கர்ம பலன்கள் எஞ்சி நிற்பதால் பிறவி தொடர்கிறது. அவற்றை அடுத்த பிறவியில் அநுபவித்தாக வேண்டும்.

இதிலிருந்து விடுதலை எப்போது கிடைக்கும்? பூரண சுதந்திரம், நாம் ஆசைகளிலிருந்து விடுதலை பெறும்போது தான் கிட்டும்.

மனதையும் ஐம்புலன்களையும் அடக்காதவனுக்கு எத்தனை செல்வங்கள் வந்தாலும் ஆசை அடங்காது. திருப்தியுள்ள மனிதனால் மட்டும்தான் போதும் என்ற எண்ணத் தோடு நிம்மதியாக வாழ முடியும். மாறாக மனம் அடங்காதவன் உலகமே தனக்கு கிடைத்தாலும் சந்தோஷம் அடைய மாட்டான்.

திருப்தியுள்ள மனமே வாழ்விலிருந்து விடுதலை பெற வழி வகுக்கும். ஆன்ம நெறியில் வாழ்பவர்கள் கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடைவர்.

ஒருவனுக்கு சொத்தும் செல்வமும் சேரச்சேர பிரச்சனை கள்தான் அதிகமாகும். அதனால் அவன் மன நிம்மதியை இழக்கிறான். ஆகவேதான் சாஸ்திரங்கள் பொருள்கள் மீது அதீத ஆசைப்படுவதை ஒடுக்குமாறு நமக்கு போதிக்கின்றன. அதற்காக நம் குடும்பத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் இருந்து ஒதுங்கிப் போக வேண்டுமென்பதில்லை. குடும்பப் பொறுப்புகளிலிருந்து நழுவவும் கூடாது. அதே சமயம் பகவான் மீது பற்றுக் கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டும். ஒரு எல்லைக்கு மேல் சொத்து சுகங்களைச் சேர்த்து குவிப்பதில் நாட்டம் கொள்ளக் கூடாது. அது உன்னை பல சிக்கல்களிலும் பிரச்சனைகளிலும் கொண்டு விடும். சுகத்தை அநுபவிப்பதற்கு பதிலாக துக்கத்தை அநுபவிக்க நேரிடும்.

ஆசையைத் "தீ" என உருவகப்படுத்தி பகவான் கீதையில் பேசுகிறான். *அனலேன ஜ்ஞானம் ஆவ்ருதம்'* (3–39). ஆசைத் தீ ஞானத்தை மறைக்கிறது. ஐம்புலன்கள், மனம், புத்தி இதற்கெல்லாம் இருப்பிடம் இந்த காமம் என்னும் ஆசைத் தீ. இது அறிவை மறைக்கிறது. உடலில் உறையும் ஜீவனை மயக்குகிறது.

ஐம்புலன்கள் பொருள்கள் மீதும், சிற்றின்பத்திலும் ஆசை கொள்கிறது. புலன் நுகர்வுக்கான இந்த ஆசைகளை ஞானம் கொண்டே தவிர்க்க வேண்டும். இறைத் தொண்டில் முழுவதுமாக ஈடுபடும் பொழுது புலன் நுகர்வுக்கான காமச் செயல்கள் நீங்கி பற்றற்ற நிலையை அடையமுடியும்.



# மூவரும் ஒன்றாகிய மூஷிக வாகனன்

- திருமதி கே. சுப்புலெட்சுமி
பரமக்குடி, 9500725676

இரட்டைப் பிள்ளையார் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் மற்றும் பெரிய கோயில்களில் காணலாம். மூன்று விநாயகர் ஒரே சந்நிதியில் காண்பது மாணிக்கவாசகர் கட்டிய ஆவுடையார் கோயிலில் அமைந்துள்ளது.

பாண்டியனின் கட்டளைப்படி குதிரைகள் வாங்கச் சென்றார் மாணிக்கவாசகர். வழியில் ஆவுடையார் அருகில் வெயில் காத்த விநாயகர் கோயில் உள்ளது.

மாணிக்க வாசகரின் கண்களில் தோன்றிய அவ்விநாயகர், பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர் தானே எனக் காட்டியருளினார். சிவனடியாரான மாணிக்கவாசகர் தான் கனவில் கண்ட காட்சியை மனதில் நிறுத்திய காரணத்தால் அன்று விநாயகரை ஒரே சந்நிதியில் பிரதிஷ்டை செய்தார்.

பிரம்மா, விஷ்ணு, சிவன் அம்சமாக இவ் விநாயகர்களை ஒரே இடத்தில் தரிசித்து மேன்மை பெறலாம்.

தந்தையைப் போல பிள்ளையும் அமைந்துள் ளதை உணரல் வேண்டும். சிவனைப் போன்று சிவந்த மேனி கொண்டவர். சிவனுக்கு ஐந்து சிரங்கள் போன்று ஹேரம்ப கணபதிக்கு ஐந்து தலைகள் உள்ளன.

தற்போதைய விருதுநகர் மாவட்டம் நரிக்குடிக்கு அருகே புளிச்சகுளம் கிராமத்தில் பஞ்சமுக விநாயகர் பத்துத்திருக்கரங்களோடு காட்சித் தருகிறார். ஆன்மீகம், அரசியல் என்ற இரண்டையும் இருகண்களாகக் கொண்டு சேவை புரிந்த பிரம்மச்சாரி திரு.முத்துராமலிங்கத்தேவர் பிரதிஷ்டை செய்த ஹேரம்ப கணபதி தனது பூர்வீகத்தலமாகிய புளிச்ச குளத்திற்கு பெருமை சேர்த்த மகான் ஆவார்.

விநாயகருக்கும் முக்கண் உள்ளது. சிவனைப் போன்றே தலையில் மூன்றாம் பிறை அணிந்திருக்கிறார். இவரும் ஐந்தொழிலின் அதிபதி யாக அமைந்துள்ளார். இவரும் நடராஜரைப் போன்று நர்த்தன கணபதியாவார். சிவனின் இடப்புறம் பார்வதி தேவி இருப்பது போல இவரது இடப்புறம் வல்லபை என்ற தேவி இருக்கிறார்.

ஆறுமுகனின் ஆறுபடை வீடுகள் போன்று விநாயகருக்கும் ஆறுபடை வீடுகள் உண்டு.

1. திருவண்ணாமலை – இங்கு அல்லல் போக்கும் விநாயகர்,

2. விருத்தாசலம் – இங்கு ஆழத்துப் பிள்ளையார். பள்ளத்தினுள்ளே படியிறங்கி தரிசிக்க வேண்டும். இங்கு இவருக்கெனத் தனியாகக் கொடிமரம் உள்ளது.

3. திருக்கடையூர் – அபிராமி திருக்கோயில். இங்குள்ள விநாயகர் கள்ள வாரணப் பிள்ளையார், அபிராமி பட்டர் இவரைப் போற்றிப் பாடியுள்ளார்.

4. மதுரை – மீனாட்சி அம்மன் கோயிலினுள் சித்தி விநாயகர் வெற்றிகள் தருபவராவார். அம்மன்








சன்னதிக்குச் செல்லும் வழியில் ஊஞ்சல் மண்டபம் அருகில் இருக்கும் விநாயகர் இவர்.

5. பிள்ளையார் பட்டியில் – கற்பக விநாயகராக தும்பிக்கையில் சிவலிங்கம் வைத்திருக்கும் நிலை யுடன் இரு கரங்களோடு காட்சி தந்து நினைத்ததை அருள்பவர்.

6. கடலூர் மாவட்டத்தில் – திருநாரையூரில் உள்ளவர் பொள்ளாப் பிள்ளையார். பொள்ளா என்றால் உளியால் செதுக்கப்படாதவர் என்று பொருளாகும். சுயம்புவாகத் தோன்றியவர். தேவாரப்பாடல் களைத் தொகுத்தளித்த நம்பியாண்டார் நம்பிக்குக் காட்சி தந்தருளியவர்.

ஆவணியில் விநாயகர் சதுர்த்தியிலிருந்து புரட்டாசி மாத வளர்பிறை சதுர்த்திவரை 30 நாட்கள் கடைபிடிக்கும் விரதம் சதுர்த்தி விரதம். ஆனால், காலப்போக்கில் மாறுபட்டு ஒவ்வொரு மாத சதுர்த்தி விரதம் மேற்கொள்ளப்படுகிறது. “சரவணபவ” என்பது முருகப் பெருமானது ஆறெழுத்து மந்திரம். அது போல் “ஓம் வக்ர துண்டாய நம:” என்பது விநாயகரது ஆறெழுத்து மந்திரம். முருகன் இதைக் கூறி வழிபட்டே தாரகாசுரனை வென்றார்.

இந்திரன் கௌதம ரிஷியின் சாபத்தால் பெற்ற 1000 கண்களை யோனிகளை நீக்க இம்மந்திரத்தைக் கூறி வழிபட்டு சாபம் நீங்கப் பெற்றான். விநாயகர் வழிபாட்டில் அவரது பெயர் உச்சரிப்பதால் பெரும் பயன் பெறலாம்.

விநாயகர் உருவம் பொறித்த நாணயங்கள் :– கொங்கு நாட்டு சேரர்கள் கணபதி நாணயம் வெளியிட்டு பயன்படுத்தினார்கள். தவிர 1693 முதல் 1812 வரை ஆற்காடு நவாபுகள் வெளியிட்ட கணபதி உருவம் பொறித்த நாணயம் இருந்ததன் சான்று நாணய சேமிப்பாளர் மூலம் அறியமுடிகிறது. சங்க காலம் தொட்டே விநாயகர் வழிபாடுகள் இருந்ததாக வும், பல்லவர் காலத்திற்குப் பின்பு விநாயகர் வழி பாடு வந்ததாகவும் இரு வேறு கருத்து இருந்தாலும் புராண காலம் முதல் விநாயகர் வழிபாடு இருந்ததை ரிக் வேதம் கூறும்.

**விநாயகர் காயத்ரி மந்திரம் :-**

*“ஓம் தத் புருஷாய வித்மஹே வக்ர துண்டாய தீமஹி தன்னோ தந்தி பிரசோதயாத்”* இதில் “தந்தி” என்பது விநாயகரைக் குறிக்கும். இதை ரிக்வேதம் மூலம் அறிய முடிகிறது. விஜய நகரப் பேரரசு, பாண்டிய அரசு, தஞ்சை, செஞ்சி நாயக்க மன்னர்களும் இராமநாதபுர சேதுபதிகளும் கணபதி நாணயங்கள் வெளியிட்டதாக அறிய முடிகிறது. தொன்மையான வழிபாடு விநாயக வழிபாடாகும். சங்க காலத்தில் ஆவணி ஆண்டின் முதல் மாதமாகும். இதை இன்றும் கேரள மக்கள் பின்பற்றுவதைக் காணலாம். கொல்லம் ஆண்டு ஒன்பதில் முதல் மாதம் ஆவணி. முதல் மாதத்தில் வளர்பிறை சதுர்த்தியும், சித்திரை நட்சத்திரமும் கூடிய நாளே விநாயகர் தோன்றிய நாள். நாம் வல்லமை பெற வல்லமையுடனும், சித்திகள், புத்திகள் மிகவாக சித்தி, புத்தியுடன் காட்சி தருகிறார்.

சித்தியும், நல்ஞானமும் வல்லமையும் பெற மூவரை சித்தி, புத்தி, வல்லபையை தன்னுடன் கொண்ட நிகரில்லாத் தலைவனை வணங்கி உயர் சிறப்படைவோம்.

# ஆண்டாள் போற்றும் கண்ணன்

– முனைவர். ந. மைதிலி, சென்னை.




திருமால் பகவத்கீதை மூலம் உரைத்த செய்தியாக, கண்ணனைப் போற்றும் வகையில் திருப்பாவை முதல் தொடரே, *"மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்"* என்று தொடங்கும். திங்கள் போன்ற குளிர் வதனன் மற்றும் மதிநிறைந்த மாதவன் என்பதைக் குறிப்பாக, நேர்த்தியாக உரைத்த தன்மை அருமை. கண்ணன் இருக்கும் இடமெல்லாம் சீரும் சிறப்பும் நிறைந்திருக்கும் அல்லவா?

*"சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்"*

என ஆயர்பாடியின் வளமைக்கு முழுமுதற் காரணம் எம்பெருமான் நந்தகோபன் குமரன் கண்ணன் ஆங்கு இருப்பதால் என்று அறுதியிட்டுப் போற்றுகிறாள்.

*"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாட....*
*திங்கள் மும்மாரி பொழியும்...."*

செல்வத்திற்கு அடையாளமான பசுக்கள் நிரம்பப் பால் சுரக்கும். திருமகள் ஒருக்காலும் அவ்விடத்தில் இருந்து நீங்க மாட்டாள். எப்படி? கண்ணன் திருவடிப்பட்ட இடம் அப்படி. எம்பெருமான் கண்ணனே!

*"தூயோமாய் வந்துநாம் தூமலர்*
*தூவித்தொழுது*
*வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க"*


நின்றோம். வடமதுரை மைந்தா! யமுனைத் துறைவா! தாமோதரா! எங்களைக் காப்பாற்ற வேண்டும் என இறைஞ்சிப் போற்றுகிறார்.

மேலும், பேய்முலை நஞ்சுண்டவன், கள்ளச்சகடம் உதைத்தவன், மாவாய் பிளந்தவன், வெள்ளத்தரவில் துயில்பவன் எவனோ அவனே தேவாதி தேவன், கண்ணபெருமான். அவனைச் சேவித்து உய்வோம் என்று போற்றினாள். மனத்துக்கு இனியனாய் கண்ணன் ஆண்டாள் மனத்தில் உறைந்துள்ளான்.

கண்ணபெருமானைப் பலவிதமாகப் போற்றி, பின்னர் அவனிடம் கெஞ்சினாள்.

*"திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்*
*அங்கண் இரண்டும்கொண்டு எங்கள் மேல் நோக்குதி"*

அப்போது தான் எங்கள் சாபங்கள் தீரும் என்று அவனின் கருணை வேண்டுகிறாள்.



*''அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி...''* என்ற பாசுரத்திற்கு ஈடு இணை கிடையாது. காரணம், எம்பெருமான் அவதாரச் சிறப்புகளைச் சொல்லிச் சொல்லி போற்றிப் பாடியுள்ளார்.

*''தென் இலங்கை செற்றான் திறல் போற்றி*
*பொன்றச்சகடம் உதைத்தாய் புகழ் போற்றி*
*கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி*
*குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி''*

இதைவிட கண்ணனை வேறு யாரால் ஏற்றி போற்ற இயலும்? கஞ்சன் வயிற்றில் நெருப் பென்ன நின்ற நெடுமால் கண்ணனை அருத்தித்து வந்ததை அழகாக எழுதுகிறாள்.

கண்ணபெருமானுக்கு மூடநெய் பெய்து முழங்கை வழிவார சர்க்கரைப் பொங்கல் படைப்பேன். இனிப்பாய் என்மனத்து அவன் என்றும் இருக்க என்று கூறுவதால் நாமணக்கப் பாடி, வாய் மணக்க விருந்து படைக்கத் தயார் நிலையில் உள்ளதை அறியும் போது பக்திக்கு மிஞ்சிய சக்தி எதுவும் இல்லை என்பது உறுதி.

*''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு*
*உற்றோமே ஆவோம் உமக்கே நாம் ஆட்செய்வோம்''*

எத்தனை பிறவி எடுத்தாலும் பகவானே! ஸ்ரீகிருஷ்ணா! உன்வரவாம் உறவு வேண்டும். உமக்கு யான் அடிமை என்று போற்றும் விதமாக சரணாகதி தத்துவத்தை மையமாக வைத்து விடுகிறாள்.

**நாச்சியார் திருமொழியில் கண்ணன் :**

காமன் மன்மதனை வணங்கி, துவரைப் (துவாரகா) பிரானிடத்துச் சேர்ப்பிக்க விண்ணப்பம் செய்கிறாள். பிள்ளைப் பிராயம் முதல் அவனை நன்கு அறிவேன். அந்த நினைவில் வாழ்கிறேன். என் நிலை கண்டு இரங்கி அருள்வாய் என்று மன்மதனை வேண்டினாள்.

*''நாமம் ஆயிரம் ஏத்த நின்ற நாராயண நரனே''*

எங்கள் சிற்றிலைச் சிதையாதே. அதுபோல் எங்கள் அகச் சிற்றிலை விட்டு நீங்காதே என்று மன்றாடுகிறாள். காமனைத் தொழுதவள் பின்னர் குயிலிடத்துத் தன் ஆற்றாமையை வெளியிடுவதன் வழி கண்ணனைப் போற்றுகிறார். *''வெள்ளை விளிசங்கு இடங்கையிற் கொண்ட விமலன்''* என்று கண்ணன் தோற்றப் பொலிவு உரைத்து, *''என் வேங்கடவன் வரக்கூவாய்''* எனக் குயில் விளிக்கப்படுகிறது.

தொடர்ந்து நன்கு அலங்கரிக்கப்பட்ட திருமண மண்டபத்தில் தனக்கும் கண்ணனுக்கும் நடக்கவுள்ள திருமணத்தைப் பற்றிக் கனாக் கண்டதாகப் பாடி இறையருள் பெறுகிற மகிமை பேசப்படுகிறது.

**தமிழில் பக்தி :**

இன்தமிழ், ஒண்டமிழ், வண்டமிழ், செந்தமிழ் எனப் பல வாறாகப் போற்றப்படும் தமிழ்மொழி பல இலக்கண இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டு, இன்னமும் தன் சீரிளமை மாறாமல் நாளும் வளர்ந்து வருகிறது. இவற்றுள் ஒவ்வொரு கால கட்டத்திலும் இம்மொழி சமுதாயத் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்துள்ளதை இலக்கிய வரலாற்றின் மூலம் அறியலாம்.

தமிழிலக்கியங்கள் அனைத்தும் சிறந்தது என்றாலும் பக்தி இலக்கியங்கள் ஒரு சக்திவாய்ந்த மார்க்கத்தை வெளிப்படுத்தியதுடன் நிகழ்விலும், இனி வருங்காலத்திற்கும் பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

பக்தி இலக்கியங்களுள் ஆழ்வார்களால் அருளிச்செய்த நாலாயிர திவ்வியப் பிரபந்தம் தனக்கென ஒரு தனித்த இடத்தை வகிக்கிறது. அவற்றினுள்ளும் பதினோரு ஆழ்வார்களுக்கு இடையே பெண் ஒருத்தி இருந்து ஆண்டவனை ஆட்கொண்ட ஆண்டாள் வாழ்க்கை மற்றும் அவளின் படைப்புகள் உன்னதம்

என்பதை யாராலும் மறுக்க மறக்க முடியாது. எப்படி என்பதை, "ஆண்டாள் போற்றும் கண்ணன்" என்னும் தலைப்பில் இக்கட்டுரை வாயிலாகக் கண்டு தெளிவோம்.

**கருவில் தோன்றாத் திருமணி:**

கண்ணனை குழந்தையாகப் பாவித்து, நீராட்டி, சீராட்டி, பாராட்டி, தாலாட்டி, பூச்சூட்டி... எனப் பல நிலைகளில் பாடி மகிழ்ந்தவர் பெரியாழ்வார். அவரின் பக்திக்கு ஆட்பட்ட எம்பெருமான் தன் உபய நாச்சியாரை துளசிச் செடியின் மருங்கில் பிறக்க வைத்து உரிய நேரத்தில் ஆட்கொண்டார். பெரியாழ்வரால் கண்டு எடுக்கப்பட்ட அவள் கோதை என்ற நாமம் பூண்டு வளர்ந்தாள். இவள் கண்ணன் மீது கொண்ட அபார பக்தி அன்பெனும் பிரேம பக்தி யாகி இறுதியில் காதல் வயப்பட்ட நிலையில் தன்னை மறந்தாள்.

*"மானிடவர்க்கென்று பேச்சுப்படில்*
*வாழகில்லேன் கண்டாய் மன்மதனே"*

என்ற தொடர் ஆண்டாளின் உறுதிப்பாட்டை எடுத்துரைக்கிறது. இப்படிக் காதல் மீதூர வாழ்ந்த நங்கை கண்ணனை எப்படிக் கண்டாள்?

**ஆண்டாள் இறையையாண்டாள்**

கண்ணபெருமானைக் கன்னித்தமிழால் பாமாலையால் தொடுத்த மாலை கொண்டு பூமாலை சூடியும் சூட்டியும் போற்றியவள். மல்லி நாட்டு வில்லி புத்தூர் வனிதையிவள் மற்ற ஆழ்வார்கள் போல் அல்லாமல் இறைக்கே மதிநலம் அருளியவள். மற்றையோர் மதிநலம் மிக்கோர். ஆனால், ஆண்டாள் கூர்ந்த மதிநலம் பெற்றிருந்ததால் இறையே இவளை நாடி வந்தது.

ஆண்டாள் சூடிய மாலையே தனக்கு வேண்டும் என்று மாலவனைக் கேட்க வைத்த எழிற்கோதை. திருவரங்கன், தன் அரங்கிற்கு மணப்பெண்ணாக வருமாறு அழைப்பு விடுக்கப்பட்ட திருநல்லாள். எங்கும் கண்ணன்; எதிலும் கண்ணன்; மாயக்கண்ணன்; என் மனம் நிறை கண்ணன் என்ற தளராத உறுதிப்பாடு கண்ணனுடன் இரண்டறக் கலக்கும் வரை ஒரு கணப்பொழுதும் மறந்தாளில்லை.

ஆயர் பாடியில் கண்ணன் வாழ்ந்த காலத்தில் தான் வசிக்கவில்லை என்ற ஏக்கம் ஆண்டாளைச் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. அதன் பிரதிபலிப்பு திருப்பாவை எனும் நூலாக உருவெடுத்தது. கண்ணனைக் கைப்பற்றி தீவலம் வரவேண்டும். அவனோடு பேசி கலந்து உறவாட வேண்டும் என்ற அவாவின் உந்துதலால் மலர்ந்தது நாச்சியார் திருமொழி.

**திருப்பாவையில் கண்ணன்**

"கோகுலத்தில் பிறந்த ஆய்ச்சியரில் ஒருத்தியாக நான் இருந்தேனில்லை. கண்ணன் தன் லீலைகளைக் கண்ணாரக் கண்டேனில்லை" என்று ஏங்கித் தவிக்கிறாள் கோதை. எந்த ஒரு செயலுக்கும் நினைவிற்கும் பலன் இல்லாமல் போகுமா?

தன்னைத்தானே கண்ணனாக பாவித்து, ஆய்ச்சியராகவும் மாறி, நினைவுகளை மாற்றிக் கொண்டாள். திருவில்லிபுத்தூர் திருவாய்ப் பாடியாகிட, திருவில்லிபுத்தூர் பெண்கள் கோபியர்களாயினர். வடபெருங்கோயில் நந்தகோபன் திருமாளிகையாகத் தோற்றம் பெற்றது. வடபத்ரசாயி கோதை நாச்சியாருக்குக் கண்ணனாகக் காட்சித் தருகிறார். இப்படி கண்ணன் பொருட்டு அனைத்தையும் தம்வசமாக்கும் திறமை பெற்றவள் கண்ணனைப் போற்ற எவ்வளவு ப்ரயத்தனம் பெற்றிருப்பார்? அப்பப்பா? நினைத்தாலே மெய் சிலிர்க்கிறது. வார்த்தைகளால் விவரிக்க முடியாத ஒன்று.

*"மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத .... மதுசூதனன் வந்து என்னைக் கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழி நான்"*

இப்பாசுரம் மூலம் ஆண்டாள் ஒரு தீர்க்கதரிசி என்பது புலனாகிறது. வர இருப்பதை அதாவது அரங்கனோடு தான் இரண்டறக் கலக்க இருப்பதை அந்தச் சமயத்தில் தான் எப்படி எல்லாம் அலங்காரம் செய்து கொள்வேன் என்பதை எவ்வளவு தெளிவாகப் பாடியுள்ளார். நினைக்க, ஏற்படுவது பிரமிப்பு ஒன்றே.

**சரணடைவோம்**

இறுதியாக, தான் உற்று அனுபவித்த பகவான் ஸ்ரீகிருஷ்ணரை, என்னரங்கத்து இன்னமுதர், குழலழகர், வாயழகர், கண்ணழகர்..... எனப் பலவாறு வியந்தோதி, இனி யாரும் இப்படிப் போற்றுதற்கு இல்லை எனும்படி ஆண்டாள் கண்ணனைப் போற்றியுள்ளார்.



திருமலை திருப்பதி
தேவஸ்தானம்



# “ஸ்ரீவேங்கடேஸ்வரா அன்னப்பிரசாத அறக்கட்டளை”

*திருமலையிலும், திருச்சானூரிலும் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னப்பிரசாதம் வழங்கப்படுவது அறிந்ததே. தற்பொழுது தி.தி.தே. அன்னப்பிரசாத அறக்கட்டளை பக்தர்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும் இதற்கு நன்கொடை அளிக்க நல்வாய்ப்பினை நல்குகின்றது. அதுவே,*

## ஒரு நாள் நன்கொடை திட்டம்

| | | |
|---|---|---|
| 1) | காலை சிற்றுண்டி | - 7 இலட்சம் |
| 2) | மதிய உணவு | - 11.5 இலட்சம் |
| 3) | இரவு உணவு | - 11.5 இலட்சம் |
| | மொத்தம் | - 30 இலட்சம் |

**0877-2264258**
**0877-2264375**
**0877-2264237**

திருமலை திருப்பதி தேவஸ்தான அன்னப்பிரசாத அறக்கட்டளை இத்தொகையை நன்கொடையாளர்களிடமிருந்து பெற விழைகிறது. நன்கொடையாளர் / தனிப்பட்ட நபர் / நிறுவனங்கள் / நிறுமங்கள் / அறக் கட்டளைகள் இணைந்தும் இருக்கலாம்.

இவர்கள் ஒரு நாளைக்கு மொத்தம் ரூ.30 இலட்சமோ/காலை சிற்றுண்டிக்கு ரூ.7 இலட்சமோ/மதிய உணவிற்கு ரூ.11.5 இலட்சமோ/ இரவு உணவிற்கு ரூ.11.5 இலட்சமோ அளிக்கலாம்.

தி.தி.தேவஸ்தானம் நன்கொடையாளர்களுக்கு அளிக்கும் வசதிகள் ஒரே விதமாகவே இருக்கும்.

**மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும் :**

**“ ஸ்ரீவேங்கடேஸ்வரா அன்னப்பிரசாத அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம்
நிர்வாகக் கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி ”**

www.tirumala.org என்ற இணையதளத்திலும் விவரங்களைக் காணலாம்.

108 திவ்ய தேச வைபவம் 69

# திருவண்வண்டூர்

– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு :**

"நாரதீய புராணம்" தோன்றிய திவ்ய தேசம். "நாரத: கலகப்ரிய" என்பர். கலகத்தை உண்டாக்கி, உலகுக்கு நன்மையும் தெளிவையும் ஏற்படுத்தும் நாரதர், தன் தகப்பனாரான பிரம்மாவிடம் ஒரு விவாதத்தில் சிக்கிக் கொண்டார். பிரம்மன் சபித்தார்.

சாபவிமோசநம் பெற, நாரதர் இத்தலத்துக்கு வந்து, இந்த எம்பெருமானைக் குறித்துத் தவம் இருந்து, எம்பெருமான் நேரில் தோன்றி, எல்லாவற்றையும் படைக்கும் ஆற்றல்கள் பற்றிய ஸூக்ஷமங்களை உபதேசிக்க, ஞானம் – அபாரமான ஞானத்தைப் பெற்ற நாரதர் 25000 சுலோகங்களில் "நாரதீய புராணத்தை" இங்கு தான் இயற்றினார் என்பர்.

**சிறப்புகள் :**

நம்மாழ்வார், பராங்குச நாயகியாக ஆகி, இவ்வெம்பெருமான் மீது பித்தேறி "பிரேமத்தில் பெண் பேச்சு, ஞானத்தில் தன் பேச்சு" என்று சொல்வார்களே அப்படி, பிரேமத்தில் பெண்ணாக ஆகி, வண்டினை இந்த எம்பெருமானுக்குத் தூது அனுப்பி, திவ்ய தேசத்தையே "திருவண்வண்டூர்" என்று அழைக்குமாறு செய்து விட்டார்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | கமலநாதன் பாம்பனையப்பன் (மேற்கு நோக்கிய நின்ற திருக்கோலம்) |
| தாயார் | : | கமலவல்லீ (தனிச்சந்நிதி இல்லை) |
| விமாநம் | : | வேதாலய விமாநம். |
| தீர்த்தம் | : | பம்பா தீர்த்தம், பாபநாச தீர்த்தம். |
| ப்ரத்யக்ஷம் | : | நாரதர், மார்க்கண்டேயர். |
| ஆகமம் | : | நம்பூதிரிகளின் பூஜாக்ரமம். |
| மங்களாசாஸனம் | : | நம்மாழ்வார். |

**விசேஷம் :**

ஸ்ரீஅழகிய மணவாளப் பெருமாள் நாயனார், இந்த எம்பெருமான், அடியவர்களை எக்காலத்திலும் கைவிடாத உறுதி உள்ளவன் என்கிறார். பூமியில் இருந்து புதிய விக்ரகங்கள் கண்டு எடுக்கப்பட்டு புதிய சந்நிதிகள் ஸ்தாபிக்கப்பட்டு உள்ளன.

**த்யானச்லோகம் :**

*ஸிதப்ரமர பட்டணே கமல தாயிகாவல்லப:*
*ஸமுத்ர ஸமவர்ணவான் ஸகலவேத வைமாநிக:।*
*ஸபச்சிம முகஸ்ஸதா வஸநிநாரத ப்ரார்த்தித:*
*ஸமஸ்த முநி பூஜிதே விமல தீர்த்த பம்பாச்ரயே ॥*

**பாசுரம் :**

*"வேறு கொண்டும்மை யானிரந்தேன் வெறி வண்டினங்காள்!*
*தேறு நீர்ப்பம்பைவட பாலைத் திருவண்வண்டூர்*
*மாறில் போரரக்கன்மதின் நீறெழச்செற்றுகந்த*
*ஏறு சேவகனார்க் கென்னையுமுளன் என்நின்களே".*

– நம்மாழ்வார்

*"தேவும் உலகும் உயிரும் திரிந்து நிற்கும்*
*யாவும் படைத்த இறை கண்டீர் - பூவில்*
*திருவண்வண்டூர் உறையும் தேவாதி தேவன்*
*மருவண்வண்டூர் துளவமால்"*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்**

*641. ஓம் கும்ப: நம:*

பக்தர்களால் விரும்பப்படுபவனே

*ஓம் குண்டலிந்யை நம:*

அடியாரின் துயரக்குரலைக் கேட்டு உடனே பரிகாரம் செய்யும் பரிவுக்குப் பரிசாகப் பெருமாள் அளித்த காதுகளுக்கான ஆபரணம் அணிந்தவளே.

*642. ஓம் விஸுத்தாத்மா நம:*

பக்தர்களிடம் எல்லாவற்றையும் அர்ப்பித்த சுத்த ஆத்மாவே

*ஓம் பவ்யாயை நம:*

மங்கள ஸ்வபாவம் உள்ளவளே.

*643. ஓம் விஸோதந: நம:*

பக்தர்களைப் பரிசுத்தமாக்குபவனே.

*ஓம் துர்க்கதிநாஸிந்யை நம:*

ஏழ்மையை அழிப்பவளே.

*644. ஓம் அநிருத்த: நம:*

அநிருத்தனாக ஜநார்த்தனன் என்று வாஸுபாண்ட க்ஷேத்ரவாஸியே.

*ஓம் ம்ருத்யுஞ்ஜயாயை நம:*

ம்ருத்யு போன்ற சம்சாரத்தை அழிப்பவளே.

*645. ஓம் அப்ரதிரத: நம:*

துஷ்டர்களைத் தண்டிப்பதில் தடுப்பவர் இல்லாதவனே.

*ஓம் த்ராஸ ஹராயை நம:*

எல்லாவித பயத்தையும் அகற்றுபவளே.

*646. ஓம் ப்ரத்யும்ந: நம:*

ஆத்மாவை விளங்கச் செய்யும் ப்ரத்யும்நனே.

*ஓம் நிர்பயாயை நம:*

தான் யாரிடத்திலும் பயப்படாதவளே.

*647. ஓம் அமிதவிக்ரம: நம:*

மூவுலகும் போதாத திருவடிப் பெருமை உடையவனே.

*ஓம் ஸத்ரு ஸூதிந்யை நம:*

காமக்ரோதாதிசத்ருக்களை வதம் செய்பவளே.

*648. ஓம் காலநேமி நிஹா நம:*

காலசக்ரத்தின் வட்டமான அவித்யையை அழித்தவனே.

*ஓம் ஏகாக்ஷராயை நம:*

ஸ்வரூபம், ஸ்வபாவம் இவற்றில் எவ்வித மாறுபாடும் இன்றி இருப்பவளே.

*649. ஓம் ஸௌரி: நம:*

திருக்கண்ணபுர ஸ்ரீஸௌரிராஜப் பெருமானே.

*ஓம் ஸத்புரந்தர்யை நம:*

பெண்மைக்குரிய நற்பண்புகள் அனைத்தும் பெற்றவளே.

*650. ஓம் ஸூர: நம:*

ஸூரனான ராமபிரானே.

*ஓம் ஸூரபக்ஷாயை நம:*

தெய்வஸ்வபாபம் உள்ளவர்களிடம் அன்புள்ளவளே.

*ஸ்ரீமதே கமலவல்லீநாயிகா ஸமதே*
*ஸ்ரீபம்பாஸ்ரயயா கமலநாத பரப்ரஹ்மணே நம:*

**குறிப்பு :**

திருச்செங்குன்றூர்–கோட்டயம் சாலையில் மழுக்கூரிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.



திவ்ய தேச வைபவம் வளரும்...

**ஆளவந்தார் வாழித்திருநாமம் தொடர்ச்சி...**

*(பச்சையிட்ட ராமர் பதம் பகருமவன்)* பச்சை – பச்சை இலை, தூதுவளை கீரை. பச்சை – உதவி. தூதுவளை கீரையை இட்டு யாமுனாசார்யரான ஆளவந்தாரைத் திருத்தினவர் ராமர் என்ற பெயருடைய மணக்கால் நம்பி ஆவர். அதாவது ஆளவந்தார் ராஜ புரோகிதனான ஆக்கியாழ்வானோடு வாதப்போர் செய்து வெற்றி கொண்டதை அறிந்த மணக்கால் நம்பி ஆளவந்தாரைக் காண ஆசைப்பட்டார்.

அரண்மனையில் கட்டும் காவலுமாய் இருப்பதைக் கண்டு நம்பி திருமடப்பள்ளில் புகுந்தார். ஆளவந்தாருக்கு உணவு செய்பவர்களைக் கண்டு, “ஆளவந்தார் விரும்பி உண்ணும் கறியமுது எது?” என்று கேட்டார். அவர்களும் அவர் விரும்புவது “தூதுவளை” என்று சொன்னார்கள். உடனே நம்பியும் அன்று முதல் ஆறு மாத காலம் மடைப்பள்ளிக்குத் தூதுவளை (கீரை வகை) இட்டு வந்தார்.

மேலும், இவருக்கு புருஷார்த்தங்களும், பகவத் விஷயமும், நாலாயிரமும், நான்காவது ஆச்ரம ஸ்வீகாரம் முதலான அர்த்த விசேஷங்கள் எல்லாம் அருளினவர் ஸ்ரீராம மிச்ரர் என்னும் மணக்கால் நம்பியாவார். இது பற்றியே “பச்சை இட்ட ராமர் பதம்” என்று மணக்கால் நம்பியைக் கொண்டாடுகிறார்.

*(பாடியத்தோன் ஈடேறப் பார்வை செய்தோன்)* “பாஷ்யம்” என்ற சொல் தமிழில் பாடியம் என்று ஆயிற்று. பாஷ்யமாவது விரிவாய்ப் பொருள் விளக்கம் செய்யும் உரை நூலாகும். பிரம்மஸூத்ரத்துக்கு ஸ்ரீபாஷ்யம் என்னும் உரை எழுதியவர் இராமாநுசராவர். அவரே பாஷ்யகாரர் ஆவர்.

அந்த பாஷ்யகாரர் உய்வு பெற ஆளவந்தார் அவரைப் பார்வை செய்தார். எங்ஙனேயென்னில் – காஞ்சியிலுள்ள இராமாநுசருடைய பெருமையை இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் வாயிலாகக் கேட்ட ஆளவந்தார், உடனே அவரைக் காண வேண்டும் என்று எண்ணி திருவரங்கத்தில் இருந்து காஞ்சிபுரத்துக்கு வந்தார்.

அவர் சீடரான திருக்கச்சி நம்பி மூலமாக பேரருளாளன் பெருந்தேவித் தாயாரைத் திருவடி தொழுதார். பிரதக்ஷிணமாக வரும் போது பாடசாலை குருவான யாதவப்ரகாசன் என்பவர் தம் சீடர்களோடு பேரருளாளனைச் சேவித்து வலம் வந்து கொண்டிருந்தார். அப்போது ஆளவந்தாரும் “இவர்களிலே இளையாழ்வாரான



# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்



உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972



# திருமலையில் பிளாஸ்டிக் தடை

**கலியுக வைகுண்டமாகத் திகழும் புண்ணியத் திருத்தலம் திருமலையாகும். இத்திருமலையில் பல்லுயிர்களும் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றன. இப்புண்ணிய திருத்தலத்தின் தூய்மைக்காக ஒவ்வொருவரும் தம் பங்கு முயற்சி கொள்ளல் வேண்டும். இதனை கருத்தில் கொண்டே திருமலை திருப்பதி தேவஸ்தானமும் திருமலையில் பிளாஸ்டிக் (பிளாஸ்டிக் பாட்டில்கள், பிளாஸ்டிக் பைகளுக்கு) பொருட்களுக்கு நிரந்திர தடை விதித்துள்ளது. எனவே, பக்தர்களும் திருமலையிலும், இரு மலைவழிச் சாலைகளிலும் அலிபிரி, ஸ்ரீவாரி மெட்டு நடைபாதைகளிலும் பிளாஸ்டிக் பொருட்களை எறியாதீர்கள். துணிப் பைகளையும், பிளாஷ்டிக் அல்லா த குடிநீர் பாட்டில்களையும் பயன்படுத்துங்கள். திருமலையில் தி.தி.தே. வழுங்கும் ஜலபிரசாதத்தை உபயோகியுங்கள். திருமலையின் சுற்றுபுறத்தையும், சுகாதாரத்தையும் காப்பதோடு நீர் வளத்தையும் நில வளத்தையும் காப்பதும் நம் கடைமையாகும்.**

இராமாநுஜர் யார்?" என்று திருக்கச்சி நம்பிகளைக் கேட்க, நம்பியும், "சிவந்து நெடுகி வலியராய் நீண்ட வையும், உருண்டிருப்பவையும், இரும்பு உலக்கை போல் விளங்குபவையும், எல்லா ஆபரணங்களை யும் அலங்கரிக்கத் தக்கவையுமான ஸ்ரீராமனுடைய திருக்கைகள் போல் ஆஜாநுபாஹுவாய் நடுவே வருகிறவர்" தான் இராமாநுஜர் என்று சுட்டிக் காட்டி னார். ஆளவந்தாரும் அவரைத் தமது மலர்ந்த மதுர மான கம்பீர கண்களாலே செவ்வரியோடப் பார்த் தார்.

தம்மிடமுள்ள பவிஷ்யதாசார்ய விக்ரஹத்துக் கும் இவருக்கும் அவயவங்கள் எல்லாம் ஒரு அச்சில் வார்த்தது போல இருக்கக் கண்டு "ஆம் முதல்வன் இவன்" என்று நம்மாழ்வார் அருளியதை நினைவில் கொண்டு விசேஷ பார்வை செய்தார். இதைக் குறித்தே இராமாநுஜரும் ஆளவந்தார் விஷயமாக தாம் அருளிய "யத்பதாம்போருஹத்யான..." என்னும் தனியனில் உபகார ஸ்மிருதியாக தம்மை பார்வை செய்து வஸ்து வாக்கியமைக்கு வணங்குகிறார். இது பற்றியே *"பாடியத்தோன் ஈடேறப் பார்வை செய்தோன்"* என்றபடி.

இதற்கு ஏற்ப இராமாநுஜரின் அவயவங்களின் அம்சமாக உள்ள ஆசார்யர்களைச் சொல்லும்போது ஒன்றான எம்பார் ஜீயர் ஸ்வாமிகள் *"வக்ஷஸ்தலம் யாமுநார்ய:"* என்று இராமாநுஜரின் திருமார்பாக ஆளவந்தாரைக் குறிப்பர். இதனால் இராமாநுஜர் மனத்தில் ஆளவந்தார் நீங்காத இடம் பெற்றுள்ளார் என்று சொன்னபடி.

*(கச்சிநகர் மாயன் இருகழல் பணிந்தோன்)* கச்சி – முக்தி தரும் ஏழு நகரங்களுள் ஒன்று காஞ்சிபுரம். தொண்டை நாட்டுத் திருப்பதிகளில் ஒன்று. மாயன் – வியப்பான குணம். திருவிளையாடல்களை உடைய வன். இராமாநுசரைக் கண்ட ஆளவந்தார் காஞ்சியில் பெருமாளை நோக்கி, "எந்த மாயனான பேரருளாள னுடைய அருளால் செவிடன் கேட்கும் சக்தி உடைய வன் ஆகிறானோ, காலில்லாதவன் வேகமாக நடக்க வல்லவனாகிறானோ, ஊமை பேச வல்லவனா கிறானோ, குருடன் காணவல்லவன் ஆகிறானோ, மலடியும் பிள்ளை பெறுகிறாளோ, அந்த தேவப் பெருமாளான வரதராஜனை சரணமடைகிறேன்" என்று நம் தர்சனம் வளர ஆளவந்தார் மாயன் இரு கழல் பணிந்தார். "தாம் வேண்டும் காமமே காட்டும்

கடிது” என்கிற படியே தேவப்பெருமாள் அவ்வவர்களுடைய விருப்பங்களைத் தந்தருளுகிறவர். ஆகையாலே ஆளவந்தாரும் இராமாநுசன் ஆகிற மகாநுபாவரை நம் தரிசனம் வளர விசேஷ அருள் புரிய சரணமடைவதாகச் சொன்ன படியால் *“மாயன் இருகழல் பணிந்தோன்”* என்றவாறு.

*(கடக உத்திராடத்துக் காலுதித்தான்)* கடகம் – ஆடி மாதம். உத்திராட நக்ஷத்ரத்தில் அவதரித்தவர் ஆளவந்தார். கால் – முதல் பாதம். அதாவது உத்திராட நக்ஷத்ரத்தில் முதல் பாதத்தில் அவதரித்த வராவர். “உத்திராடம் முதல் பாதத்தில் ஒரு பிள்ளையும் ஊர் கோடியில் ஒரு நிலமும் இருந்தால் உயர்வானது” என்பது முதியோர் வாக்கு. அதற்கு ஏற்ப ஆளவந்தார் தனுர் ராசியில் உத்திராடம் முதல் பாதத்தில் அவதரித்தார். அதனால் இராமாநுச ருக்கு மானஸ ஆசார்யரான உயர்வைப் பெற்றார். ஆளவந்தாருடைய முக்கியமான ஐந்து சீடர்கள் இராமாநுசருக்கு ஆசார்யரானார்கள். இவரை பரமாசார்யர் என்று கொண்டாடுவர். இவர் சேனை முதலியார் அம்சம் என்று குருபரம்பராப்ரபாவம் கூறும். இது பற்றியே *“கடக உத்திராடத்துக் கால் உதித்தான்”* என்றபடி.

*(அச்சமற மனமகிழ்ச்சி அணைந்திட்டான்)* – அணைதல் – அடைதல், பொருந்துதல் ஆளவந்தாருக்கு அச்சமாவது – திருவரங்கத்தில் தாமும் தம் சீடர்களுமாக இருந்து தர்சனத்தை நடத்தி வந்தபோது “இனிமேல் நம் தர்சனத்தை வளர்ப்பவர் யார்?” என்று விசாரம் உண்டாய், ஒருவரையும் காணாமல் முசித்துச் சிந்தித்திருந்தாராம். சிலநாள் கழித்து இராமாநுசரின் பெருமை அறிந்து அவரைக்காண காஞ்சி வந்து திருக்கச்சி நம்பிகளின் மூலமாக இராமாநுசரை யாதவபிரகாசன் திரளில் கண்டு மகிழ்ச்சி அடைந்து “ஆம் முதல்வன் இவன்” என்று விசேஷ அருள் புரிந்து தேவப்பெருமாளிடம் சரணாகதி செய்து திருவரங்கம் வந்து சேர்ந்தார். பின்னர் திருவரங்கத்தில் ஒருநாள் காலக்ஷேபம் செய்யும்போது *“இலிங்கத்திட்ட புராணத்தீரும்”* என்ற திருவாய்மொழி (4.10.3) பாசுரத்திற்கு பொருள் சொல்லும்போது “நமக்குப் பின்பு இந்த தர்சனம் நிர்வகிக்க ஒருவரையும் காணப்பெற்றிலோமே” என்கிற விசாரத்தாலே “முன்பு காஞ்சியில் கண்ட இராமாநுஜரை நினைவில் கொண்டு அவரை யாதவப் பிரகாசனோடு உறவறுத்து நம் பக்கல் சேர்க்கும் உபாயம் உண்டோ” என்று எண்ணி தேவப் பெருமாளிடம் “முன்பு செய்த சரணாகதியை பயனுடையதாக்க வேணும்” என்று வேண்டினார். இப்படி இராமாநுசனை நம் தர்சனத்தை நிர்வகிக்க வேண்டினது பற்றி “மனமகிழ்ச்சி அணைந்திட்டான்” என்றவாறு.

*(ஆளவந்தார் தாளிணைகள் அனவரதம்)* ராஜ புரோகிதனான ஆக்கியாழ்வானோடு வாதப் போர் செய்து ஆக்கியாழ்வான் வாயை அடக்குகையாலே “ஆளவந்தார்” என்ற திருநாமத்தை உடையவராய் தர்சனத்தை ஆளவந்தார் என்பர். அனவரதம் – இடை

## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*ஸ்ரீவைஷ்ணவர்த்$_3$த்$_4$யர்த்த$_2$மதீவ ப$_4$க்த்யா தஸ்ய*
*ப்ரஸீதே$_3$தி ஸ யாமுநார்ய: ।*
*ப$_4$ாந்தம் மஹாதே$_3$விகயா சரண்யம் ஸ்ரீதே$_3$வராஜம்*
*சரணம் ப்ரபந்ந: ॥*
(15)

**“ஸ்ரீவைஷ்ணவர்கள் பல்கிப் பெருகுவதற்காக இராமாநுஜரைக் கடாக்ஷிப்பீர்” என்று மிகுந்த பக்தியுடன், பெருந்தேவியோடு கூடிய சரண்யரான தேவப்பெருமாளை சரணமடைந்தார் யாமுநாசார்யர்.**

– “ஸுதர்சனம்” ஆசிரியர் இயற்றியது

வீடின்றி எப்போதும். ஆளவந்தார் தாளிணையின் பெருமை அவர்தம் சீடர்கள் தொடங்கி இன்றுவரை விளங்கி வருவது காணலாம்.

ஆளவந்தார் இறுதிக் காலத்தில் அவர்தம் சீடர்களான பெரிய நம்பியும் திருக்கோட்டியூர் நம்பியும் ஆளவந்தாருடைய திருவடிகளைச் சேவித்து தங்களுக்குத் தஞ்சமான வார்த்தை அருள வேண்டினர். அவரும் "கோயிலாழ்வாரே உங்களுக்கு உயிர் நிலை" என்றும், "பெரிய பெருமாள் திருவடிகளின் கீழே வீணையும் கையுமாய் ஸேவித்திருக்கும் திருப்பாணாழ்வார் திருமேனியை பாதாதிகேசமாக ஸேவித்துக் கொண்டிருங்கோள்" என்றும் காட்டிக் கொடுத்தார். இதுபற்றியே பெரிய நம்பிகளை "ஆளவந்தார் தாளிணையை அடைந்து உய்ந்தோன்" என்று போற்றுவது காணலாம்.

பெரிய திருமலை நம்பிகளை "அய்யன் ஸ்ரீஆளவந்தார் அடி தொழுவோன்" என்றும், திருக்கோட்டியூர் நம்பியை ***''ஏற்றமாம் ஆளவந்தார் இணையடியோன்''*** என்றும், ***''அல்பகலும் ஆளவந்தார் அடி நினைவோன்''*** என்றும், ***''ஏராரும் ஆளவந்தார் இணையடியோன்''*** என்றும், ***''ஏராரும் ஆளவந்தார் இணையடிகள் மறவாத எங்கள் திருக்கோட்டியூர் நம்பி''*** என்றும் அருளுவது காண்க. மேலும் திருக்கோட்டியூர் நம்பியும் பெரிய நம்பியும் ஆளவந்தார் திருவடிகளைத் தியானித்துக் கொண்டு திருநாட்டுக்கு எழுந்தருளினர் என்று குருபரம்பரா ப்ரபாவம் கூறும். திருவரங்கப் பெருமாள் அரையரும் திருவடிகளை வணங்கிப் பேறு பெற்றார். இது பற்றியே ***''தீதில் யமுனைத் துறைவன் சேவடியோன்''*** என்று புகழ்ந்தது காணலாம். திருமாலையாண்டானையும் ***''அம்புவியில் ஆளவந்தார் அடியிணையோன்''*** என்று போற்றுவது காணலாம். மாறனேரி நம்பிகளையும் ***''ஆளவந்தார் திருவடிகள் ஆச்ரயித்தான் வாழியே''*** என்று வாழ்த்தியது காணலாம். திருக்கச்சி நம்பிகளை ***''தெருளாரும் ஆளவந்தார் திருவடியோன்''*** என்பர்.

இராமாநுசரையும் ***''எதிகட்கிறைவன் யமுனைத் துறைவன் இணையடியாம் கதி பெற்றுடைய இராமாநுசன்''*** என்று திருவரங்கத்தமுதனார் அருளியபடி இராமாநுசருக்கு நேரே ஆசார்யர் ஆளவந்தாராவர். வேதாந்த தேசிகர் குருபரம்பரா ஸாரத்தில் ***''என் உயிர் தந்து''*** என்ற பாட்டில் "ஆளவந்தார் ... என்று இவரை முன்னிட்டு எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே" என்று அருளியது காண்க. மேலும், யதிராஜ ஸப்ததியில் (8) ***''விகாஹே யாமுநம் தீர்த்தம்''*** என்கிற படியே தீதில்லாது நல்லோர் திரளைக் காக்கும் பணியில் பிருந்தாவனம் ஸம்பந்தம் உடையவராய், காளியன் முதலான பாம்புகள் தொடர்பில்லாதவராய், கண்ணன் அருளுக்கு இலக்கானவரான யமுனையின் துறை போலுள்ள யமுனைத் துறைவனான ஆளவந்தாரை அடைந்து களிப்போம் என்றதும் காண்க. மணவாளமாமுனிகள் தாம் அருளிய யதிராஜ விம்சதியில் (15) ***''சுத்தாம யாமுந...''*** என்று ஆத்மா வுக்கு சுத்தியாவது தாம்தாம் தம்தம் நூல்களில் (அதாவது ஆளவந்தார் தமது ஸ்தோத்ர ரத்னத்தில் (62) கூறிய குற்றங்கள் தம்மிடம் உள்ள தாகக் கூறுவர்) தம்மிடமுள்ளனவாகக் கூறிக் கொண்ட குற்றங்களில் ஒன்றுகூட ஆளவந்தாரிடம் இல்லாமை யாகும். அப்படிப்பட்ட சுத்தாத்மா வான ஆளவந்தார் திருவடிகளை அனவரதம் வாழ்த்து வோமாக.

***தொடரும்...***




**அரவணைத்துயில்வோன், சேஷசாயி, நாகசயனன், பணிசயனன் என்றெல்லாம் ஸ்ரீமஹாவிஷ்ணுவிற்குப் பெயர். அவனுடைய படுக்கை என்றுமே ஆதிசேஷன் தான். மஹாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களில் பலராமர் எட்டாவது அவதாரமாவார். பலராமரும் கண்ணனும் பிரிக்க முடியாத சகோதரர்கள்.**

**இராமாயணத்தில் இலக்குவனாகவும், கிருஷ்ணாவதாரத்தில் பலராமனாகவும் அவதரித்தவர் அவரே. வைணவம் தழைக்க அவதரித்த ஸ்ரீமத் இராமாநுஜரும் ஆதிசேஷன் அவதாரமே. இன்றும் நல்லமலைத் தொடர் என்ற பெயருடன் திருமால் அனைத்து வரங்களையும் பிரசாதிக்க சேவை சாதிக்கும் மலைத் தொடர் ஆதிசேஷனே. அதனால்தான் ஸ்ரீஇராமாநுஜர் அதன்மேல் கால் வைக்காமல் முழங்காலால் ஏறத் தலைப்பட்டார்.**

# விதுரர் என்னும் விவேகி

–திரு. எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்,
9488139685

மகாபாரதம் என்பது அற்புதமான கதாபாத்திரங்களைத் தன்னகத்தே கொண்ட வைரச் சுரங்கம் போன்றது. அந்த வைரச் சுரங்கம் வழங்கிடும் விலைமதிப்பற்ற வைரம் தான் விதுரர் என்ற கதாபாத்திரம். எல்லையற்ற அறிவும், இவ்வுலக வாழ்க்கையின் நிலையாமையைப் பற்றிய தெளிவும் கொண்டு பிரகாசிக்கும் விதுரரின் வாழ்வும் அறிவுரைகளும் நம் ஒவ்வொருவரின் அகக்கண்களையும் திறக்கக் கூடியவையாகும்.

குரு வம்சத்திற்கு வாரிசு இல்லாமல் போகும் நிலை ஏற்படவே, வேதவியாசர் மூலம் வாரிசுகளைப் பெறும் முயற்சியை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. விசித்திர வீரியனின் மனைவிகளாகிய அம்பிகை, அம்பாலிகை இருவருக்கும் இவ்வாறு வேத வியாசர் மூலம் பிறந்த திருதராஷ்டிரன் குருடனாகவும், பாண்டு வெளுத்த தேகம் உடையவனாகவும் இருந்தனர்.

எவ்விதக் குறைபாடுகளும் இல்லாத வாரிசு ஒன்றைப் பெறும் முயற்சிக்கு ஒத்துழைக்க விருப்பமில்லாத அம்பிகையும், அம்பாலிகையும் தங்கள் வேலைக்காரியை வியாசரிடம் அனுப்பி வைக்க, விதுரர் பிறந்தார். நல்ல அறிவும் தோற்றப் பொலிவும் கொண்டிருந்த போதிலும், ஒரு வேலைக்காரியின் மகனாகப் பிறந்து விட்ட காரணத்தால் விதுரரால் அரசராக முடியவில்லை. மன்னன் திருதராஷ்டிரனின் அவையில் மதிப்பு மிக்க மந்திரியாக விளங்கினார் விதுரர்.

நீதியும், நேர்மையும் தம்முடைய இரு கண்களாகக் கொண்டு விளங்கிய தம்முடைய தம்பி விதுரரிடம் தமையன் திருதராஷ்டிரர் மிகுந்த பாசம் கொண்டிருந்தார். அரசாங்க நிர்வாகத்தில் தமக்கு ஐயங்கள் ஏற்படும் பொழுதெல்லாம் விதுரரின் வழிகாட்டுதலை எதிர் நோக்கினார்.



சூதாட்டத்தில் தோற்ற பாண்டவர்கள் சமாதானத்தை விரும்பியபோதும் திருதராஷ்டிரனின் மூத்த மகன் துரியோதனன் போரையே நாடினான். அதைத் தொடர்ந்து, பாண்டவர்களின் எண்ணத்தையும் படைபலத்தையும் அறிந்து வர அனுப்பப்பட்ட சஞ்சயன் கூறியவற்றைக் கேட்டு திருதராஷ்டிரர் மிகவும் கலக்கமுற்றார். போரில் தம்முடைய நூறு மகன்களும் இறக்கப் போவது உறுதி என்பதை உணர்ந்த திருதராஷ்டிரனின் மனம் பாசத்தால் நிலை கொள்ளாமல் தடுமாறியது.

அச்சமயம் அவருக்கு விதுரர் கூறிய நீதி நெறிகளுடன் கூறிய அறிவுரைகளே "விதுர நீதி" என்று அழைக்கப்படுகிறது.

மிகச் சிறந்த வில்லாளியுமாகிய விதுரர்

**பண்பாட்டு ஆடை**

- திருமலையானின் வி.ஐ.பி. தரிசனத்திற்கும் மற்றும் ஆர்ஜித சேவைக்கு வரும் பக்தர்கள் பாரத பண்பாட்டு ஆடைகளையே அணிந்து வர வேண்டும்.
- ஆண்கள் : வேட்டி, மேற்துண்டு அல்லது குர்தா பைஜாமா.
- பெண்கள் : புடவை, இரவிக்கை/பாவாடை, தாவணி/ பஞ்சாபி டிரஸ்-சுடிதார்.

அநியாயத்தின் பக்கம் நிற்க விரும்பாததால் துரியோதனாதிகளால் இகழப்பட்டு, மகாபாரதப் போரில் பங்கேற்காமல் தீர்த்த யாத்திரை மேற்கொண்டார். நீதிமான், அறிவாளி என்பதையெல்லாம் தாண்டி, பரமை காந்திகள் எனப்படும் யோகியர் பின்பற்றும் உணவுப் பழக்கத்தின் மேன்மையை விதுரரின் சரித்திரத்தில் இடம் பெற்றுள்ள ஒரு சம்பவம் இவ்வுலகுக்குத் தெளிவுபடுத்துகிறது.

மகாபாரதப் போர் நடக்காமல் தடுப்பதன் பொருட்டு பாண்டவர்கள் சார்பாக சமாதானத் தூதுவராக ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா அஸ்தினாபுரத்திற்கு எழுந்தருளினார். அச்சமயம், தன்னுடைய மாளிகையில் அளிக்கப்படவுள்ள விருந்து உபசாரங்களை ஏற்குமாறு துரியோதனன் விடுத்த அழைப்பினை ஏற்காத ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா, விதுரரின் இல்லத்திற்குச் சென்று தங்கி அவர் அளித்த உணவுகளையே விருப்பத்துடன் புசித்தார் என்பதே அந்த இனிய சம்பவமாகும். யோகிகளின் தலைவனே ஸ்ரீகிருஷ்ணர், "ஓம் யோகினாம் பதயே நம:" என்பது ஸ்ரீகிருஷ்ணருக்குரிய நூற்றி எட்டு நாமாவளிகளில் ஒன்றாகும். மனம் ஒன்றை நினைக்க, வாய் ஒன்றைப் பேச, செயல் வேறு ஒன்றாகச் செய்பவர்கள் சாதாரண மனிதர்கள். ஆனால், மனம், வாக்கு, காயம் (தேகம்) ஆகிய மூன்றினாலும் ஒரே விதமாகச் செயல்படுபவர்களே யோகிகள் ஆவார்கள்.

அவ்வாறு செயல்படும் யோகிகள், சாத்துவிக குணம் உடையவர்களால் தயாரிக்கப்பட்டு அளிக்கப்படுகின்ற சாத்துவிக உணவையே ஏற்றுக் கொள்வர். முற்காலத்தில், தினந்தோறும் உஞ்சவிருத்தி செய்து தங்களுடைய உணவுக்கு வேண்டிய தானியங்களைப் பெறுகின்ற வேதியர்களும்
சாத்துவிகர்கள்
இல்லங்களில் அளிக்கப்படுவதையே ஏற்றுக் கொள்வது வழக்கம். தெய்வீகச் சிந்தனைகளிலேயே ஒன்றி வாழும் இத்தகைய யோகிகள் "சுயம்பாகம்" என்று கூறப்படும் சொந்தமாகச் சமைத்துச் சாப்பிடுவதையே விரும்புவார்கள். அல்லது தங்கள் மனைவி அல்லது உறவினர்களால் தூய்மையாகச் சமைக்கப்படுவதையே ஏற்பார்கள்.

அந்த உணவையும் தாங்கள் வழிபடும் இறைவனுக்கு நைவேத்தியமாக சமர்ப்பித்த பின்பே அவர்கள் உண்பது வழக்கம். இக்காரணங்களால் தங்களது எண்ணங்களில் சாத்துவிகமும் தூய்மையும் நிறைந்திருக்கும் என்பது அவர்களது நம்பிக்கையாகும். திருக்கோயில்களில் வழங்கப்படும் அன்னப்பிரசாதங்களும் புனிதமும் சாத்துவிகமும் நிறைந்தவையே.

ஆனால், இறைநம்பிக்கை இல்லாதவர்களாலும், மூர்க்க குணம் கொண்டவர்களாலும், சண்டையை விரும்புபவர்களாலும், காசுக்காக உணவை விற்பவர்களாலும் அளிக்கப்படுபவற்றை ஏற்பவர்களின் சிந்தனை, பேச்சு, செயல் ஆகியவை ஒன்றுக்கொன்று முரண்பாடு கொண்டவையாக இருக்கும் என்பதே பெரும் யோகிகளான நம் முன்னோர்களின் கருத்தாகும்.

இதனை விளக்கவேதான், யோகிகளின் தலைவராகிய ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவும், தீய எண்ணம் கொண்ட மன்னனாகிய துரியோதனனின் அரண்மனை விருந்தினை ஏற்க மறுத்து, உயர்ந்த எண்ணம் கொண்ட மந்திரியாகிய விதுரரின் வீட்டுச் சாப்பாட்டினை நைவேத்தியமாக விரும்பி ஏற்றுக் கொண்டார்.

நாமும் தெய்வீக நெறியில் உயர வேண்டும் எனில், புனிதமான இடங்களில் தூய்மையான சிந்தனையுடன் அளிக்கப்படுவது எளிய உணவானாலும் அதனையே அமிர்தமாக நினைத்து உண்டு மகிழ வேண்டும் என்பதையே விதுரரின் வாழ்க்கையில் நிகழ்ந்த இச்சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.

# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## अष्टादशः पाठः பாடம்-18

तव = உன்னுடைய, உனக்கு, உனது
पुनः = மறுபடியும், மீண்டும்
मम = என்னுடைய, எனக்கு, எனது
बहिः = வெளியே
तत् = அது,அந்த,அவர்கள்
अन्तः = உள்ளே
करिष्यति = செய்யக் கூடியவன் (செய்வான்)
करिष्यसि = நீ செய்யக்கூடியவன் (செய்வாய்)
करिष्यामि= செய்யக்கூடியவன் (செய்வேன்)

### வினாக்கள்

1. तव जनकः अद्य किं करोति?
2. मम जनकः गृहे नास्ति।
3. श्वः पाकं कः करिष्यति?
4. मम अनुजः करिष्यति।
5. तत्-गृहं मम।
6. त्वं झटिति स्नानं करिष्यसि किम्?
7. युष्मद्गृहं अन्तरस्ति।
8. अस्मद्गृहं बहिरस्ति।
9. सः पुनः स्नानं करिष्यति किल।
10. अहमपि करिष्यामि शाकं पाकमपि।

1. உங்கள் வீடு எங்கு இருக்கும்?
2. என்னுடைய வீடு முன்பு அங்கேயே இருந்தது.
3. இப்பொழுது இங்கு உள்ளது.
4. அவர்கள் சமையலை எப்பொழுது செய்ய முடியும்?
5. நீ நாளை எனக்கு ஒரு கட்டிலைச் செய்யுங்கள்.
6. இப்பொழுது நீ மறுபடியும் எதற்கு குளித்தாய்.
7. சமையல் அங்கு செய்துக் கொண்டிருக்கிறார்கள்.
8. நீ இப்பொழுது சமையலை செய்யமாட்டாயா என்ன?
9. எங்கள் வீட்டில் தண்ணீர் இல்லாததால் ஏரியில் குளியுங்கள்.
10. உங்கள் பிள்ளைகள் வீட்டில் இருக்கிறார்களோ இல்லையோ?

### விடைகள்

1. உன் தந்தை இந்த வேளை (இன்று) என்ன செய்துக்கொண்டிருக்கிறார்?
2. என்னுடைய தந்தை வீட்டில் இல்லை.
3. நாளை யார் சமையல் செய்யப்போகிறார்கள்?
4. என்னுடைய தம்பி செய்வான்.
5. அந்த வீடு என்னுடையது.
6. நீ விரைவாகக் குளியல் செய்வாயா?
7. உங்கள் வீடு உள்ளே இருக்கிறது.
8. எங்கள் வீடு வெளியே இருக்கிறது.
9. அவன் மறுபடியும் குளிப்பான் அல்லவா!
10. நானும் குழம்பும் சமையலும் செய்யக் கூடியவன்.

1. युष्मद्गृहं कुत्रासीत्?
2. मम गृहं पूर्वमपि तत्रैवासीत्।
3. अधुना अत्र अस्ति।
4. ते पाकं कदा करिष्यन्ति?
5. त्वं श्वः मह्यं एकं मञ्चं कुरु।
6. अधुना त्वं पुनः कुतः स्नानं अकरोः?
7. पाकं तत्र कुर्वन्ति; विलम्बं मा कुर्यात्।
8. त्वं इदानीं पाकं न करोषि किम्?
9. अस्मद्गृहे जलं नास्तीत्यतः तटाके स्नानं कुरु।
10. युष्माकं बालकाः गृहे सन्ति, उत न;

தெலுங்கு மூலம்: மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி, தொகுப்பு: மகாமகோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா
தமிழாக்கம்: டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்

வி னா டி வி னா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-1

## ஸப்தகிரி இதழினைப் படியுங்கள் வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்

1. கடலூர் மாவட்டம் திருநரையூரில் அருள் புரியும் பிள்ளையாரின் பெயர் ................................................
2. இராமாநுஜர் ..........................................................................................அம்சமாக அவதரித்தார்
3. குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி என்று பாடியவர்........................................................
4. கமல நாதப் பெருமாள் அருள் புரியும் திருத்தலம்.........................................................................
5. விதுரரின் சகோதரர்கள் ...............................................................................................................
6. ஆளவந்தார் அவதரித்த திருநட்சத்திரம் .......................................................................................
7. த்யுதிமான் என்பது ........................................................... திருக்கல்யாண குணங்களில் ஒன்று.
8. ஆண்டாள் பிறந்த திருநட்சத்திரம்.................................................................................................
9. ஹயக்ரீவ ஸ்தோத்ரம் அருளியவர்................................................................................................
10. பலராமர் ....................................................................................................... அம்சமாக அவதரித்தார்.
11. வராஹ, ஹயக்ரீவ முகவடிவங்கள்...............................................................................................
12. 24 மணிநேரமும் திறந்திருக்கும் ஆலயம் .....................................................................................
13. ஜாம்பவானின் மகள் பெயர்............................................................................................................
14. கிருஷ்ணர் அவதரித்த திருநட்சத்திரம் மற்றும் திதி........................................................................
15. குரு 2வது வீட்டிலிருந்தால் ஜாதகருக்கான பலன் ...........................................................



## போட்டிக்கான நிபந்தனைகள்

- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்குட் பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியை குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.08.2022.

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

**விடையை எழுதுங்கள். திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்**



# ஆகஸ்ட் 2022
# ராசிப் பலன்கள்

- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94422 86213.



**மேஷம்**

இம்மாதம் புதிய வாகனம், பூமி வாங்கும் யோகம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெற்று நல்ல கல்லூரிகளில் இடம் கிடைக்கப் பெறுவார்கள். தாயின் ஆரோக்யத்தில் கவனம் தேவை. தொழில் துறையில் அலைச்சல் மிக அதிகமாக இருக்கும். குடும்பத்தில் செலவினங்கள் அதிகமாகும்.

**ரிஷபம்**

பெண்களால் ஏற்றம் உண்டு. தந்தையின் ஆரோக்யத் தில் அக்கறை தேவை. பழைய பாக்கிகள் வசூலாகும். குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. வேலைப்பளு அதிகமாக இருக்கும். அதற்குரிய வருமானம் உண்டு. தாயின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். கணவன்–மனைவிக்குள் நல்லுறவுகள் உண்டு. இளைய சகோதரர் களுக்கு இடமாறுதல்களுக்கான வாய்ப்பு உண்டு.

**மிதுனம்**

தொழில் துறையில் அலைச்சலும் இடமாறுதலும் உண்டாகும். செலவுகள் மிக அதிகமாகும். கண்களில் சிறு கோளாறுகள் ஏற்பட்டு பிறகு சரியாகும். எந்தக் காரியத்திலும் ஆரம்பத்தில் தடை ஏற்பட்டு பின்னர் வெற்றி கிட்டும். தந்தை, குழந்தைகளின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. தாயின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். தரிசனம் பாக்யம் உண்டு. பிறர் உதவி செய்வார்கள்.

**கடகம்**

கணவன்–மனைவிக்குள் அடிக்கடி கருத்து வேற்று மைகள் உண்டாகும். மனைவி ஆரோக்யத்தில் கவனம் தேவை. கூட்டு வியாபாரத்தில் சிறு பிரச்சனை உண்டாகும். திருஷ்டி தோஷம் உண்டு. ஆஞ்சநேயரை வழிபட்டால் நன்று. வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். சகோதரர்களால் தனபலம் உண்டு.

**சிம்மம்**

செலவினங்கள் மிக அதிகமாகும். தொழில் துறையில் வளர்ச்சி உண்டு. புதிய முயற்சிகள் செய்யலாம். பணம் கொடுக்கல் வாங்கலில் பிரச்சனை உண்டாகும். அஜீரணக் கோளாறு உண்டாகும். காரமான உணவுகளை தவிர்ப்பது நல்லது. தொழில் துறையில் பழைய பாக்கிகள் வசூலாகும். குலதெய்வ வழிபாட்டின் மூலம் தடைகள் விலகும். குலதெய்வ வாழிபாடு தனலாபம் தரும்.

**கன்னி**

திருமணமாகாதவர்களுக்குத் திருமணம் முடிவாக வாய்ப்பு உண்டு. குழந்தை பாக்கியம் கிடைக்கும். தாய்–தந்தையர் ஆதரவு உண்டு. தொழிலில் விருத்தி உண்டு. புதிய முயற்சிகள் செய்யலாம். உத்தியோகஸ்தர் களுக்குப் பதவி உயர்வுக்கு வாய்ப்பு உண்டு. பேச்சில் விவாதத்தை தவிர்ப்பது நல்லது. நண்பர்கள் உறவினர்கள் மூலம் அனுகூலம் உண்டு.

**துலாம்**

பிறரால் பிரச்சனைகள் வரும். ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. மனக்குழப்பத்தினால் தூக்கம் குறையும். கடன் வாங்கி புதிய தொழிலில் முதலீடு செய்ய வேண்டாம். கணவன்–மனைவிக்குள் சிறு பூசல்கள் வந்து போகும். பணவிஷயத்தில் மிகுந்த அக்கறை தேவை. ஏழுமலையான் தரிசனத்தின் மூலம் பிரச்சனைகள் குறையும்.

**விருச்சிகம்**

தொழில் துறையில் நல்ல வளர்ச்சி உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். மாணவர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. திருமணமாகாதவர்களுக்கு திருமணம் கை கூடும். இளைய சகோதரருக்கு உடல் உபாதைகள் உண்டாகும். மனைவியால் தனபலம் உண்டு. குழந்தை பாக்கியம் கிட்டும் சமயம். பூர்வ புண்ணிய சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும்.

**தனசு**

குடும்பத்தில் சிறு குழப்பங்கள் ஏற்பட்டு பிறகு சரியாகும். எந்த காரியத்திலும் முதலில் தடையும் பிறகு வெற்றியும் உண்டாகும். குடும்பத்தில் சிறு அளவில் மருத்துவச் செலவுகள் உண்டாகும். பிறரிடமிருந்து உதவி கிடைக்கும். கண்களில் சிறு கோளாறுகள் ஏற்பட்டு சரி யாகும். பேச்சில் விவாதங்களை தவிர்க்கவும். ஆஞ்சநேயரை வழிப்பட்டால் நன்மை கிட்டும்.

**மகரம்**

பிடிவாதமாகக் காரியத்தைச் சாதித்துக் கொள்வார் கள். சகோதரர்களால் தனலாபம் உண்டு. தாயின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. தந்தையின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். புதிய முயற்சிகளில் கால தாமதமாக வெற்றி கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப் பளு அதிகமாகும். ஏழுமலையானை வழிபட்டால் நன்மை கிடைக்கும்.

**கும்பம்**

செலவினங்கள் அதிகமாகும். அதற்குரிய வருவாயைப் பெறுவீர்கள். தன் குழந்தைகள் படிப்பு அல்லது வேலை விஷயமாக வெளியூர் செல்வர். தொழில் துறையில் அக்கறை தேவை. தொழில் துறையில் அலைச்சல் ஏற்படும். மாணவர்கள் நல்ல மதிப்பெண் களைப் பெற்று வேலைக்குச் செல்வர். திடீர் தனவரவு உண்டாகும்.

**மீனம்**

தொழில் துறையில் நினைத்ததைச் சாதிப்பீர்கள். சகல துறைகளிலும் தனலாபம் கிடைக்கும். மாணவர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. வீண் செலவுகள் குறையும். பதவி உயர்வு உண்டு. நல்ல காரியங்களுக்கு தலைமை தாங்குவீர்கள். காரிய வெற்றி உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். தொழில் துறையில் புதிய முயற்சிகளுக்கு வெற்றி உண்டு.



# மங்களப் பொருள் தேங்காய் மருத்துவகுணம்




தெலுங்கு மூலம்
டாக்டர். சி. மதுசூதன சர்மா,
90007 61390

தமிழாக்கம்
திருமதி வி. உஷா,


இந்திய கலாச்சாரத்தில் ஒரு தனித்தன்மை வாய்ந்த மங்களப் பொருள் தேங்காய். மங்களப் பொருட்களில் முதன்மை இடத்தைப் பெற்ற தேங்காய் இல்லையெனில் எவ்வித சுபகாரியமும் இல்லை.

சமஸ்கிருதத்தில் "நாரிகேளா" என்னும் தேங்காய் மிகவும் திடமாக இருப்பதால் இதனை "திருடபலா" என்றும், எக்காலத்திலும் கிடைக்கப் பெறுவதால் இதனை "சதா பலா" என்றும், "லாங்கலி" என்றும் பல்வேறு பெயர்களால் அழைக்கின்றனர்.

இம்மரத்தின் காய், பூ, இலை, பட்டை அனைத்தும் நமக்கு உபயோகப்படுகின்றன. ஆகையால் இம்மரத்தை கல்பவிருக்ஷம் என்றும் கூறுவர்.

அரகேசி என்ற தாவரக் குடும்பத்தைச் சேர்ந்த இதன் அறிவியல் பெயர் கோகஸ் ந்யூசிபெரா. இதனை இந்தியில் நாரியில் என்றும், தெலுங்கில் கொப்பரிக்காய என்றும், ஆங்கிலத்தில் கோகநட் என்றும் அழைக்கின்றனர். இந்திய பண்பாட்டின்படி திருமணத்தின் போது தேங்காயின் மேல் திருமாங்கல்யம் வைப்பது வழக்கம். இவ்வழக்கம் பவித்ரமான செயல் என்பதைக் குறிக்கும். ஹோமம் முதலிய நிகழ்ச்சிகள் செய்யும்போது "பூர்ணாஹுதி" என்ற பெயரில் தேங்காயை சமர்ப்பிப்பது ஆசாரம்.

எவ்வளவோ ஆன்மீக முக்கியத்துவத்தைக் கொண்ட இத்தேங்காய் பல வகைகளில் நமக்குப் பயன்படுகிறது. ஆரோக்கியப் பொருளாகவும், அழகுப் பொருளாகவும் பலவித நோய்களைத் தீர்க்கும் மருந்துப் பொருளாகவும் பயன்படும் தேங்காய் பற்றி அறிந்து கொள்வோம்.

**தலைமுடி நன்கு வளர்வதற்கு :**

காய்ந்த தேங்காய் துருவல், கருப்பு எள், நெல்லிப் பொடி, வெல்லம் ஆகிய ஒவ்வொன்றினையும் 50 கிராம் வீதம் எடுத்துக்கொண்டு நன்கு கலந்து மிருதுவாக இடித்து ஒரு சீசாவில் வைத்துக் கொண்டு இரண்டு வேளை ஒரு டீஸ்பூன் அளவு வாயில் போட்டு சாப்பிட்டு பின் 1 கப் பால் குடித்து வந்தால் நன்கு அடர்த்தியாகவும், கருமையாகவும் பளபளப்பாகவும் தலைமுடி வளரும்.

**வாய்ப்புண் குறைய :**

நாள்தோறும் 1–2 முறை, வேளைக்கு 100 மி.லி. தேங்காய் பாலினால் வாய் கொப்பளித்து வந்தால் வாய்ப்புண் குறையும்.

**சிறுகுடலில் ஏற்படும் புண்கள் குறைய :**

நாள்தோறும் ஒருமுறை 100–200 மி.லி. (தேங்காய்நீர்) இளநீரில் 10 கிராம், தேங்காய் துருவல், 5 கிராம் கல்கண்டு பொடி, ஏலக்காய் பொடி ஆகியவற்றை சேர்த்து சூரணம் போன்று தயாரித்து உட்கொண்டால் சிறுகுடலில் ஏற்படும் அல்சர், புண் போன்றவை குறையும்.

**பலவிதமான தலைவலி நீங்க :**

நாள்தோறும் வெறும் வயிற்றில் 100 மி.லி. தேங்காய் பாலுடன் ஒரு டீஸ்பூன் கற்கண்டு பொடி கலந்து உட்கொண்டால் நல்ல பலன் கிட்டும்.

**வேர்க்குரு குறைய :**

தேங்காய் பாலில் தகுந்தளவு சீரகப் பொடி சேர்த்து கடலைமாவுடன் கலந்து குளித்து வந்தால் வேர்க்குரு குறையும்.

**பொடுகுத் தொல்லை நீங்க :**

வாரம் ஒருமுறை அல்லது 2 முறை தேங்காய் பாலை தலைக்கு பூசி 1 மணி நேரம் கழித்து வெது வெதுப்பான நீரில் தலைக்குளியல் செய்தால் பொடுகுத் தொல்லை நீங்கி முடி நன்கு வளரும்.

**தீப்புண், கொப்பளங்கள் :-**

இளநீர், தெளிந்த சுண்ணாம்பு நீர் ஆகியவற்றை சம அளவு கலந்து அதில் மஞ்சள் சேர்த்து பூசு மருந்தாக தீப்புண் மீது பூசினால் குறையும். மேலும் கொப்பளங்கள், எரிச்சல், கை கால் எரிச்சல் ஆகியவையும் நீங்கும்.

**சிறுநீர் கழிக்கும் போது எரிச்சல் :**

நாள்தோறும் காலை மாலை ஆகிய 2 வேளையில் 100 – 200 மி.லி. தேங்காய் நீரில் ஒருடீஸ்பூன் இஞ்சி இரசம் சேர்த்து குடித்து வந்தால் சிறுநீர் கழிக்கும் போது உண்டாகும் எரிச்சல், வலி ஆகிய உபாதைகள் நீங்கும்.

**நல்ல உறக்கத்திற்கு :**

உலர்ந்த கொப்பரை, கசகசா, கற்கண்டு ஆகியவற்றை சம அளவில் கலந்து வைத்துக் கொண்டு நாள்தோறும் இரவு படுக்கும் முன் 100 மி.லி. வெதுவெதுப்பான பாலில் 1 டீஸ்பூன் அளவு சேர்த்து குடித்து வந்தால் நல்ல உறக்கம் வரும்.

**கை கால் வெடிப்பு குறைய :**

தேங்காய் பால், கிளஜரின் ஆகிய ஒவ்வொன்றையும் 10 மி.லி. அளவு எடுத்துக்கொண்டு, இரண்டினையும் நன்கு கலந்து பூசிக்கொண்டால் கை காலில் ஏற்படும் வெடிப்பு குறைந்து மிருதுவாக இருக்கும்.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்விற்கு அல்ல.

தொடரும்...

## வைணவ குறுக்கெழுத்துப்புதிர் 73க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | ன் | ன | மா | ச் | சா | ரி | யா | ர் | | | 2 நா |
| ர் | த | நா | க | 3 ஏ | | | 4 ஆ | ண் | டா | ள் | ர |
| 5 லீ | லா | சு | க | ர் | வா | ழ் | மா | ம் | 6 ந | | த |
| 7 பெ | க | | 8 தி | ரு | ம | ழி | சை | யா | ழ் | வா | ர் |
| ரி | ர | 9 தி | ரு | ப் | பா | ணா | ழ் | வா | ர் | | ட |
| யா | 10 பி | ம் | 11 ம | த் | வா | ச் | சா | ரி | யா | ர் | ட் |
| ழ் | | ரா | ங் | கி | | ர் | ஜ | னு | மா | 12 ரா | ப |
| வா | | கா | கை | 13 மீ | ரா | பா | ய் | பா | னா | 14 ஜ | ண |
| ர் | ர் | க் | யா | ல் | 15 து | ள | சி | தா | ச | ர் | ய |
| | ச | 16 து | ழ் | 17 வா | ர் | த | ந் | ந | வா | க | 18 ரா |
| 19 பே | யா | ழ் | வா | ர் | | | ர் | வ | தே | ம | 20 நா |
| | 21 வி | | ர் | ப | ம் | 22 க | பீ | ர் | தா | ச | ர் |

# இதில் பொருந்தாதது எது?



.................................



.................................



.................................



.................................

குறிப்பு : லக்ஷ்மி தாயார், கிருஷ்ணர், ஆதிசேஷன், வினாயகர் இவர்களுக்கு தொடர்பு இல்லாதவற்றை கட்டத்தில் எழுதவும்.



இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களை கண்டு பிடியுங்கள்



1) கட்டிடத்தின் நுனிப்பகுதியில் டிசைன்
2) நுழைவு வாயிலின் டிசைன்
3) மரங்கள்
4) கிருஷ்ணரை குளிப்பாட்டும் நீர்
5) பானை
6) பறவையின் தோகை
7) சன்னலில் உள்ள டிசைன்

# சதுர்த்தி விரதம்

சித்திரக் கதை

*கதை மூலம் :டாக்டர் கே.ரவிச்சந்திரன்*

*சித்திரம் :திரு. சிவாஜி*




ருக்மிணி! இந்த அவதூறைப் போக்க நான் காட்டிற்கு செல்ல வேண்டும். அது வரையில் சதுர்த்தி விரதத்தைக் கடைபிடி.
அப்படியே ஸ்வாமி!
ஸ்ரீகிருஷ்ணர் காட்டிற்குச் சென்றார். சமந்தகமணி ஜாம்பவானிடம் இருப்பதை அறிந்தார். ஜாம்பவானின் குகைக்குச் சென்றார்.
ஜாம்பவா! அம்மணியை என்னிடம் கொடுதத்து விடு.
முடியாது
யுத்தமே இதற்கு தீர்வாகும்.
யுத்தம் எனக்கும் விருப்பமே!
ஸ்ரீகிருஷ்ணரே அன்று இராமன் என்பதை ஜாம்பவான் உணர்ந்தான்.
ஸ்வாமி! என்னை மன்னியுங்கள். சமந்தகமணியுடன் என் மகள் ஜாம்பவதியையும் ஏற்றுக் கொள்ளுங்கள்.
சத்ரஜித்! இதோ உன் சமந்தக மணி.
கிருஷ்ணா! என்னை மன்னியுங்கள். சமந்தக மணியுடன் சத்யபாமாவையும் ஏற்றுக் கொள்ளுங்கள்.
யாரொருவர் வருடத்திற்கொருமுறை சதுர்த்தியன்று விரதம் மேற்கொண்டு சதுர்த்தி பூஜை செய்கின்றனரோ சதுர்த்தியன்று சந்திரனைக் காண்கின்றனரோ அவர்களுக்கு இன்னல்கள் விலகி, அமைதியும் செல்வமும் பெற்று ஸ்ரீகிருஷ்ணரை போல் விளங்குவர்.
முற்றும்.

பல்சுவை பகுதி

# சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



## பொருத்துக...

| | | |
|---|---|---|
| 1. ஆண்டாள் | - | அ. ஆதிசேஷன் |
| 2. கிருஷ்ணர் | - | ஆ. கருடன் |
| 3. சதுர்த்தி | - | இ. ஹஸ்தம் |
| 4. கணபதி | - | ஈ. பூரம் |
| 5. பஞ்சமி | - | உ. ரோஹிணி |

1.ஈ, 2.உ, 3.அ, 4.இ, 5.ஆ.




## ஸ்ரீஸூக்தம்-5ம் பாடல் அறிவோம்...

சந்த்ராம் ப்ரபாஸாம் யசஸா
ஜ்வலந்தீ
ச்ரியம் லோகே தேவஜுஷ்டா
முதாராம்।
தாம் பத்மநேமிம் சரணமஹம்
ப்ரபத்யே
அலக்ஷ்மீர் மேநச்யதாம்
த்வாம் வ்ருணே॥

## வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

வரலக்ஷ்மி அள்ளி விரதமன்று வழங்கிடுவாள் தாயாரை வரலக்ஷ்மி பூஜித்தால் எல்லாம் வரங்களை

வரலக்ஷ்மி விரதமன்று வரலக்ஷ்மி தாயாரை பூஜித்தால் வரங்களை எல்லாம் அள்ளி வழங்கிடுவாள்



## பாதையைக் கண்டுபிடி

ஆண்டாள் ஸ்ரீகிருஷ்ணரை சரணடைய வேண்டி பல பாசுரங்களைப் பாடி துதித்தார்.

அப்பபேற்பட்ட ஆண்டாள் தாயாருக்கு ஸ்ரீகிருஷ்ணரை அடைய வழி காட்டிடுங்கள்...

## விடுகதை பகுதி...

1. சட்டையைக் கழற்றினால் சத்துணவு அது என்ன?
2. உரச உரச குழைவான், பூச பூச மணப்பான். அவன் யார்?
3. கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டு வீடு, அதனுள் வெள்ளை மாளிகை நடுவில் குளம். அது என்ன?

1.வாழைப்பழம்,
2.சந்தனம்
3.தேங்காய்

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.





அண்மையில் அமெரிக்காவில் உள்ள சியாட் நகரத்தில் தி.தி.தே. நடத்திய ஸ்ரீநிவாச கல்யாணத்தில்
பங்கு பெற்ற தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு.ஒய்.வி.சுப்பாரெட்டி தம்பதியினர்



அண்மையில் அமெரிக்காவில் உள்ள சான்ப்ரான்சிஸ்கோ நகரத்தில் தி.தி.தே. நடத்திய ஸ்ரீநிவாச கல்யாணத்தில்
பங்கு பெற்ற தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு.ஒய்.வி.சுப்பாரெட்டி தம்பதியினர்









அண்மையில் அமெரிக்காவில் உள்ள செயிண்ட் லூயிஸ், டல்லாஸ் நகரங்களில் தி.தி.தே. நடத்திய ஸ்ரீநிவாச கல்யாணத்தில்
பங்கு பெற்ற தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு.ஒய்.வி.சுப்பாரெட்டி தம்பதியினர்

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-07-2022 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.

